
www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

# தூண்டில்




TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 24

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய நிலைமைகள்

- நமது நிருபர்கள் -

ஜனதா விமுக்தி பெரமுனையின் தலைவரான ரோகண விஜயவீர 12.11.89இல் சுட்டுக் கொல்லப்பட்டார். 13ஆம் திகதி பாதுகாப்பமைச்சர் பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டித் தெரிவித்த விபரங்களாவன:

கண்டியில் உள்ள உல்பன என்ற இடத்தில் தனது குடும்பத்துடன் தங்கியிருந்தபோது விஜயவீர கைது செய்யப்பட்டார். அன்றைய தினமே அவர் குடும்பத்துடன் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டார். வன்செயல்களை நிறுத்திக்கொள்ளுமாறு இளைஞர்களுக்கு அவர் விடுத்த வேண்டுகோள் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது.

இதன் பின்பு கொழும்பை அடுத்துள்ள ஜே.வி.பி.யின் தலைமையலுவலகத்திற்கு இராணுவத்தையும், பொலிசையும் விஜயவீர கூட்டிச் சென்றார். அங்கிருந்த ஜே.வி.பியின் அரசியல் பொறுப்பாளரான கேரத்திடம் சகல ஆவணங்களையும் இராணுவத்திடம் ஒப்படைக்கும்படி விஜயவீர கூறினார்.

சில பத்திரங்களை எடுத்து இராணுவத்தினரிடம் கொடுத்த கேரத் திடீரென விஜயவீரவை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். இராணுவம் கேரத்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. அந்த இடத்திலேயே கேரத்தும், விஜயவீரவும் கொல்லப்பட்டனர். அவசரகால விதிகளின்படி அன்றைய தினமே இருவரின் உடல்களும் எரிக்கப்பட்டுவிட்டன.

14.11.89இல் பாதுகாப்பமைச்சர் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்த விபரங்களாவன:


ரோகண விஜயவீரவின் உதவியாளரான கமநாயக்க களுத்துறையில் வைத்து கைதுசெய்யப்பட்டு விசாரணைகளுக்காகப் பொரலஸ்கமுவவுக்கு கொண்டுவரப்பட்டார். வாகனத்தில் அவர் கொண்டுவரப்படும் பொழுது தப்பியோட முயற்சிக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது சடலமும் விசாரணைகளின்றி எரிக்கப்பட்டது.

முக்கிய ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்ட பின்பே இவர்கள் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டார்கள். ரோகணவிஜயவீரவுடன் கைது செய்யப்பட்ட அவரது குடும்பத்தினர் காணமல் போய்விட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சண்டே டைம்ஸின் கேலிச் சித்திரம்




அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்திய இராணுவம் வெளியேறிச் சென்றபின், தம்பிலுவில் திருக்கோயில் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட ரி.என்.ஏ என்றழைக்கப்படும் தமிழ்த் தேசிய இராணுவ முகாம்கள் மீது 5.11.89இல் தரைவழியாலும் கடல்வழியாலும் வந்து எல்.ரி.ரி.ஈ.யினர் வந்து தாக்குதலை மேற்கொண்டனர். இரண்டு முகாம்களிலும் உள்ள ரி.என்.ஏ குழுவினர் சந்திப்பதைத் தடுக்குமுகமாக எல்.ரி.ரி.ஈ.யினால் வீதித்தடைகள் போடப்பட்டிருந்தன

இறுதியாகக் கிடைத்ததகவல்களின்படி எல்.ரி.ரி.ஈயைச் சேர்ந்த 26பேரும், ரி.என்.ஏ யைச் சேர்ந்த 30பேரும் - கொல்லப்பட்டனர். 140 ஈ.பி ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் அவர்களுடைய ஆயுதங்களுடன் - காணமல் போய்விட்டனர். எல்.ரி.ரி.ஈ.யால் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

7.11.89இல் ரி.என்.ஏ.யினர் பாண்டிருப்பு மத்திய முகாம், சவளக்கடை, மல்வத்தை முகாம்களுக்கு பின் வாங்கினர். இதன்போதும் இவர்கள் எல்.ரி.ரி.ஈ.யால் வேட்டையாடப்பட்டனர்.

இத் தாக்குதல்களின் பின் அம்பாறையை விட்டு வெளியேறும்படி ரி.என்.ஏ ஈரோசுக்கு உத்தரவிட்டது. 10.11.89இல் அக்கரைப்பற்றிலுள்ள ஈரோஸ் முகாம் ரி.என்.ஏ.யால் தாக்கப்பட்டது.

ரி.என்.ஏ. முகாம்களை எல்.ரி.ரி.ஈ தாக்கும் போது எஸ்.ரி.எவ் என்ற இலங்கை விசேட அதிரடிப்படையினரும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது. எல்.ரி ரி.ஈ.க்கு இலங்கை அரசாங்கத்தால் ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்திய விமானப்படை விமானங்கள் திருகோணமலைக்கு வந்துள்ளன. இவற்றிலிருந்து இறக்கப்பட்ட ஆயுதங்கள் 9 ட்ரக் வண்டிகளில் ஏற்றப்பட்டு நிலாவெளிக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான் தப்பிவிட்டேன்

சிட்டு

நாட்தவறாமல் தினக்குறிப்பெழுதும்
பழக்கம் எனக்கில்லை.
இருந்திருந்தால்
எனது டயறியின் பக்கங்களில்
நேற்றைய தினம்
இப்படி எழுதியிருப்பேன்.

காதோரத்திலும் உச்சியிலுமாக
இடைக்கிடை நரையோடிய
எனது மயிர்களுக்கு நன்றி.

தவறிழைக்காமலே
1958 என்று
எனது அடையாள அட்டையில்
பிறந்த ஆண்டைப் பொறித்துவைத்த
ஆட்பதிவுத் திணைக்கள கிளாக்கிற்கு நன்றி.

என் சீற்றுக்கருகில்
தன் குழந்தையுடன்
தூங்கியபடியே பிரயாணம் செய்த
(எனது மனைவியாகக் கருதப்பட்ட)
முன்பின் தெரியாத
அந்த இளம் பெண்ணுக்கும்
நன்றி.

நான் தப்பிவிட்டேன்.

மொட்டையடிக்கப்பட்ட தலையுடன்
வவுனியா வயல்களில்
மூச்சு முட்ட ஓடித் திரியவும்
விசிலோசையில் விழுந்து படுக்கவும்
C.V.F ஆக டியூட்டி பார்க்கவும்
ரெயினிங் எடுக்க இறக்கப்படாமல்
கொழும்பு வந்து சேர்ந்துவிட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மாகாண அரசையும்
தமிழ் மாநிலத்தையும்
பாதுகாக்கின்ற புரட்சிப்படையில்
சேர்க்கப்படுகிற தகுதி அற்றதால்
நான் தப்பிவிட்டேன்.

நியூட்டனின் மூன்றும் இயக்க விதியையும்
ஆவர்த்தன அட்டவணையில்
ஆறும் மூலகம் என்னவென்று
ஞாபகம் வைத்திருப்பதையும்
இன்னமும் செய்து கொண்டிருக்கும்
எனது தம்பிக்கு கடிதம் எழுதினேன்:

பள்ளிக்கூடம் போகவேண்டாம்.
வீட்டை விட்டு
வெளிக்கிடாதே.
முடியுமானால் தனியாகவோ
அல்லது
பெரியம்மாவைக் கூட்டிக்கொண்டோ
பிளேனிலேறி
கொழும்புக்கு ஓடி வா.
எயப்போட்டில் காத்து நிற்கிறேன்.

வாழ்க எங்கள்
ஈழத் தமிழகம்.




"உங்கட மகனை ஆமி சுட்டுச் சாக்காட்டினது கவலைதான். நாங்க என்ன செய்யிறது? அரசாங்கம் சொல்வது பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்டு சொல்லச் சொல்லி. நீங்களும் அப்பிடியே செய்தி வாசிக்கிறதுதான் உங்கட வேலைக்கு நல்லது"

— இன்னன்று

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

*தவிர்க்க இயலாத காரணங்களால் இலங்கைக் கடிதங்களுக்குரியவர்களின் பெயர்கள் தவிர்கப்பட்டுள்ளன. - கடலோடிகள்.*

தூண்டில் இதழ்களை இரண்டு தடவைகள் படிக்கக்கிடைத்தன. கடல் கடந்த, சம்பந்த-மேயில்லாத ஒரு திக்கில், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் ஒரு சூழலில் இருந்தபடி ஒரு சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடுவது என்பது சிரமமான காரியந்தான்.

கட்டுரைகள் யாவும் காத்திரமாகவும், கருத்துகள் - யாவும் சார்பற்றதாயும் இருக்கின்றன. பல்வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பவற்றிலிருந்து தொகுக்கப்பட்டிருக்கும் தகவல்கள் தங்களின் விசாலமான பார்வைக்கு ஆதாரமளிக்கின்றன . இவையெல்லாம் இங்குள்ள பல இலக்கிய சமாச்சாரங்களில் - அருகி வருகின்றன. நீங்கள் இவை தொடர்பான சூழலில் இருந்து அந்நியப்பட்டு சுதந்திரமாக இருப்பதுகூட இதற்கொரு காரணமாக இருக்கலாம்.

கலம்22, 'கொலைகளில் ஒன்றுமொன்று' என்பது இதயத்தைப் பிழிந்த ஓர் அண்மைக்-காலச் சம்பவம். இப்படி ஆயிரம் நடக்கிறது. அதே போல் 'உண்மைகள்' பகுதியில் நாட்டிலுள்ளோருக்குத் தெரிய மறுக்கும் சில உண்மைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

தூண்டில் இதழ்களைத் - தொடர்ந்தும் பெற விரும்புகின்றேன். ஆக்கங்களையும் அனுப்பி வைக்க முயற்சிக்கிறேன்.

இலங்கை .....

கலம்22உம், பழையஇதழ்களும் கிடைத்தன. அவற்றைப்-படிக்கும்போது ஒருபுறம் மகிழ்ச்சியாகவும், மறுபுறம் மிகுந்த ஆச்சரியமாகவும் இருந்தது. தேசம் விட்டுத் தேசம் போய் அதுவும் ஐரோப்பிய நாடொன்றில் இருந்தபடி இவ்வளவு அக்கறையுடனும், ஆர்வத்துடனும் நேர்த்தியான முறையில் ஒரு பத்திரிகையைக் கொண்டுவருவதைப்பார்க்கையில் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. பத்திரிகையைக் காத்திரமாகக் கொண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரவேண்டும் என்பதில் காட்டப்படும் அக்கறை என்னைக் கவர்ந்தது.

சாப்பிடுவதற்கு மட்டுமே வாயைத் திறக்க அனுமதிக்கிற ஒரு தேசத்தில், கண்ணுள்ள குருடராய், காதுள்ள செவிடராய், நாவுள்ள முடவராய் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள, விடுதலை-யின்மீது ஆர்வமும், அக்கறையும் கொண்டவர்களுக்கு குறைந்த பட்சம் வருடிக் கொடுக்கிற மாதிரியாவது ஒரு பத்திரிகை வெளிவருவது தெம்பூட்டுவதாயுள்ளது.

இவை நாளுக்குநாள் சகிக்க முடியாததாகி வருகின்ற புழுக்கம் நிறைந்த நாட்கள். இதிலிருந்து விடுபடுவதற்குரிய மாற்றுவழிக்கான தேடலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற பலருக்கும் குழப்பம் தருகிற நாட்கள். ஒரு வகையில் இந்தக் குழப்பம் தவிர்க்க முடியாததும், தேவையானதும் கூட. ஏனென்றால் இது தெளிவைப் பெறுவதற்கான தேடலில் ஒளியைத் தேடிக் கொண்டிருக்-கையில் தற்காலிக இருட்டு ஏற்படுத்துகிற குழப்பம். இது நிரந்தரமானதல்ல. ஆனால் இந்த நிரந்தரமற்ற காலத்தின் ஒவ்வொரு கணமும் கொடுமையானது. மூச்சுத் திணற வைப்பது. இதனால் தான் ஒரு பழைய உதாரணம் குறிப்பிடுகிறபடி, அலைகடலில் மூச்சுமுட்டித் துடிக்கிற ஒருவன் ஒரு துரும்பைக் கண்டாலும், அது எவ்வளவு சிறியதாக இருப்பினும் பற்றிக்கொள்ள துடிப்பதுபோல்

அட்டைப்படம் இலங்கையிலிருந்து வெளியாகும் 'தாக்கம்' என்ற சஞ்சிகையிலிருந்து நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

தூண்டில் போன்ற பத்திரிகைகள் ஒரு நம்பிக்கையின் குறியீடாக எனக்குத் தோன்றுகின்றன. அதன் எல்லைக்கும் அப்பால் சிறியளவாயினும் கூட அதன் பங்களிப்பு காலத்தின் தேவை கருதி மிகவும் பயன்மிக்கதாக எனக்கு தோன்றுகிறது.

தூண்டிலில் வெளியானஒவ்வொரு விசயம் பற்றியும் நான் இந்தக் கடிதத்தில் எழுத விரும்பவில்லை. நான் உடன்படுகிற, உடன்படாத பல அம்சங்களும் இதில் உள்ளன. ஆனால் அது அல்ல முக்கியம். அவை எழுதப்படுகின்-றன. விவாதிக்கப்படுகின்றன. இங்கே இல்லாத ஒரு வாய்ப்பை காலம் உங்களுக்கு வழங்கியிருக்கிறது. அதை நன்றாகக் கையாளுகிறீர்கள் என்பதுதான் முக்கிய-மானது.

உங்கள் வாசகர்களது - கடிதங்கள் சுவையானவை. அவர்கள் எல்லா விசயங்களையும் - வெளிப்படையாகக் காரசார-மாக எழுதுகிறார்கள். விவாதிக்கிறார்கள். எந்தக் காரணங்களும் அவர்களது சிந்தனையை எல்லைப் படுத்தவில்லை. இது ஒரு ஆரோக்கியமான நிலை. இதைக் கைவிட்டுவிடாதீர்கள். தொடருங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரியோ, தவறோ அவை நிறையக் கருத்துகளைப் பொறித்து வைக்கின்றன. பல சிந்தனைகளைத் தூண்டி விடுகின்றன.

தற்போதைய காலம் - நாம் ஒவ்வொருவரும் எமது மூளையைக் கசக்கிப் பிழிந்து பல விடயங்களைப் பற்றியும் மனம் திறந்து சிந்திக்க வேண்டிய காலம். கடந்த காலம் முழுவதும் நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கிற விசயங்கள் ஆயிரம் ஆயிரமாய் இருந்தபோதும் அது எமது தேசவிடுதலை வரலாற்றின் முன்னோக்கிய பாய்ச்சலில் ஒரிரு அங்குல நகர்வே.

தேக்கத்திற்கும், தோல்விக்கும் உள்ளாகும்போது விரக்திக்குள்ளாவது நோய்க்கூறான மனோபாவம். ஆன்மீகவாதம் என்றும் இதைச் சொல்லலாம். இதை அறிவுபூர்வமான பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதும், தோல்வியின் இயக்கவியல் காரணங்களைக் கண்டுபிடிப்பதும், அதிலிருந்து வெற்றிக்கு வழி காண்பதும் அவ்வழியில் மீள நடைபோடுவதும்தான் சரியான பொருள்முதல்வாத செயல்முறை.

எனவே அதனை மேலும் அதிகமாக ஊக்குவியுங்கள். விவாதங்களை முழுமையாக அனுமதிப்பதன் மூலம் அதை ஊக்குவிக்க முடியும். எல்லா விசயங்களையும் கேள்விக்கு உட்படுத்துங்கள். அது எதுவாக இருப்பினும் சரிதான். எதுவும் தர்க்க நியாயங்கட்கு, ஆய்வுக்கு அப்பாற்பட்டதல்ல. குருட்டு வழிபாடு, நம்பிக்கைபோன்றவை ஒருபோதும் நமக்கு உதவப் போவதில்லை. அவை இன்று நமது மண்ணில் மண்டை ஓடுகள் இடறப்படுகிற வீதிகளையும், மனிதக் குருதியில் சேறுபச் சிவந்த வயல்களையும் உருவாக்கிவிட்டிருப்பது போதும்.

தனது முட்டாள்தனத்தைப் புரிந்துகொள்வதற்கு இத்தனை பெரிய விலையை எந்தத் தேசமும் கொடுத்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

ஆனால் நாம் ஆயிரக்கணக்கான அரும்பெரும் இளம் உயிர்களை விலையாகக் கொடுத்துள்ளோம். இனிப் போதும். இனியாவது கால்போன போக்கில் - மனம் போனபடி போவதை நிறுத்துவோம். ஏனென்றால் உலகம் திறந்த பாலைவெளியல்ல. கண்மூடியபடி நடந்தாலும் தடுக்கி விழாமல் நடக்க. அது புல்லும், புதரும், முள்ளும் நிறைந்த காடு. எந்த நிமிடமும் நாம் தாக்கப்படலாம்.

எனவே எமது ஒவ்வொரு அடிக்கும் அர்த்தம் தெரியவேண்டும். அர்த்தம் தெரியாமல் ஒரு அடிகூட நகர்த்தக் கூடாது. அது அழிவைத் தவிர எந்த லாபத்தையும் தரப்போவதில்லை. எனவே எல்லாம் கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டும். எமது அரசியல், எமது கோட்பாடுகள், எமது தத்துவம், எமது சிந்தனைமுறை அனைத்தும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும்.

இலங்கை . . . . . . .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர் குழுவுக்குரிய முக்கியத்துவத்தை இழந்தநிலையில் ஒரு நிறைவான பத்திரிகை என்பதை இழந்தநிலையில் வெளிவந்த கலம் 23 கிடைக்கப்பெற்றேன். புரட்சிகரப் பத்திரிகையாயினும், ஏனைய முதலாளித்துவ கழிசடைப் பத்திரிகைகளாயினும் அப் பத்திரிகையின் கொள்கைக்குட்பட்ட ஆய்வின் அடிப்படையிலான ஆசிரியர் கருத்துகள் இன்றியமையாதவை. ஏனைய ஆக்கதாரர்களின் ஆக்கங்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டியதே ஆசிரிர் தலையங்கம்தான். அத் துண்டிலில் ஆசிரியர் தலையங்கம் இல்லாதது பக்கமின்மையை வெளிப்படுத்துவதாக இல்லை. மாறாக கடலோடிகளின் சமூகத்தின் மீதான மந்தமான பார்வையை, அரசியல் வரட்சியைத்தான் எடுத்துக் காட்டுகின்றது.

ஏனெனில் கலிங்கத்துப் பரணி எனும் கவிதையை நெருக்கமாக எழுதியிருக்கலாம். உலக வங்கி சம்பந்தப்பட்ட கேலிச்சித்திரத்தை தவிர்த்திருக்கலாம். அதாவது அடுத்த கலத்தில் இணைத்திருக்கலாம். ஆக்கங்களைக் குறைத்து ஆசிரியர் தலையங்கத்தை எழுதியிருக்கலாம்.

இத்தனைகால வரலாற்று தூண்டில்களில் இருந்து மாறுபட்டவகையில் வெளிவந்த இந்தத் தூண்டிலின் தன்மை ஏனைய தூண்டில்களில் தொடராது என நினைக்கிறேன்.

அடுத்ததாக அட்டைப்படங்கள் அந்தந்தக் காலகட்டங்களில் நிகழும் கொடூரங்களைச் சித்தரித்துக் காட்டுபவையாகவிருக்க வேண்டும். மார்க்ஸியம் - வேண்டாம் எனும் பகுதி சிறந்த பகுதி. இதை ஒவ்வொரு கலத்திலும் கற்றலும் கற்பித்தலும் எனும் பகுதியாக வெளியிட்டால் என்ன? வாசகர்களிடமிருந்து கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் தாங்களாகவே கேள்விகள் தயாரித்துப் பதிலும் கொடுத்து முதலாளித்துவவாதிகளால் உழைக்கும் மக்களிடையே விதைக்கப்பட்ட மார்க்சியம் நடைமுறைக்கு உதவாது, அது ஒரு எட்டுச் சுரைக்காய் எனும் நச்சுவிதையை அகற்றி உழைக்கும் மக்களுக்கு தொடர்ச்சியான மார்க்சிய ஒளியைத் தூண்டில் கொடுத்தாலென்ன?

வி. நடராஜன்

ஆசிரியர் தலையங்கம் என்பது சம்பிரதாயமல்ல. தவிர கலம் 23இல் நாம் தெரிவிக்க விரும்பிய பல கருத்துகளை ஏனைய ஆக்கங்கள் கொண்டிருந்ததால் அவற்றையே மறுபடியும் ஆசிரியர் தலையங்கம் எழுதவேண்டுமே என்பதற்காக மறுபதிப்புச் செய்ய வேண்டும் எனநாம் கருதவில்லை.

எம்மிடம் ஓவியர் இல்லாததால் அட்டைப்படங்களை மட்டுமல்ல, ஏனைய படங்களைக்கூட எமது கருத்திற்கேற்ப பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கிறது.

— கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடரும் இரத்தக் களரி

இந்திய இராணுவம் அம்பாறை, மட்டகளப்பிலிருந்து வெளியேறத் தொடங்கியதிலிருந்து திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் கிழக்கு மாகாணத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்திய அரசின் பணிப்பின்பேரில் இந்திய இராணுவத்தால் பயிற்சியளிக்கப்பட்ட 'தமிழ் தேசிய இராணுவம்' இந்திய இராணுவம் 'வெளியேறிய' இடங்களில் 'நிரப்பப்பட்டது'. இப்படி ஒரு இராணுவம் இருந்தால் அது 'சட்டவிரோதமானது' என்று தனிப்பட்ட இராணுவக் குழுக்களை வைத்திருக்கும் ஐ.தே.க. வின் பாதுகாப்பமைச்சர் 'கண்டனம்' தெரிவிக்க, ஈ.பி.ஆர்.எல்.எவ்வினால் வெளியிடப்படும் 'விடுதலை' பத்திரிகையிலேயே தமிழ் தேசிய இராணுவம் தமிழ் பகுதிகளில் 'ஈடுபடுத்தப்பட்டுள்ளது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அப்படியொரு இராணுவம் 'இல்லை' என வடக்கு-கிழக்கு முதலமைச்சர் 'மறுப்பு' தெரிவிக்க, தமிழ் தேசிய இராணுவம் என்ற 'சட்டவிரோத இராணுவம்' இயங்குவதை — தாம் இலங்கை அரசுக்கு 'நிரூபித்து' காட்டுவதாகத் தெரிவித்த எல்.ரி.ரி.ஈ கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டிருந்த ரி.என்.ஏ முகாம்கள் மீது இலங்கை அதிரடிப்படையின் 'ஒத்துழைப்புடன்' தாக்குதல்களை நடாத்தியது.

இத் தர்க்குத்ல்களில் பலர் கொல்லப்பட்டனர். எல்.ரி.ரி.ஈ. யால் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு, அவை 'இந்திய அரசால் வழங்கப்படவை' என்று 'இலங்கை அரசுக்கு' நிரூபித்துக் காட்டப்பட்டன.

இத் தாக்குதல்களையடுத்து அப் பகுதிகளில் கலவரங்கள் தீவிரமடைந்தன. இக் கலவரங்களை 'அடக்க' இலங்கை அதிரடிப்படையினர், இலங்கை இராணுவத்தினர் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. 'வழக்கம் போல' பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 50,000 க்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக ஏனைய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கு மாகாணத்தில் வழமையாக இடம் பெறும்' 'விசேட அம்சமான' முஸ்லீம் மக்கள் படுகொலைகள் இம்முறையும் இடம்பெறத் தவறவில்லை. இலங்கைப் பொலிசில் இருந்த முஸ்லீம்கள் ரி.என்.ஏ.யில் இருந்த முஸ்லீம்கள் என்ற போர்வையில் முஸ்லீம் பொதுமக்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

கிழக்கு மாகாணத்தின் சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு, படுகொலைகள் 'தாராளமாக' நடத்தப்பட்டன. 'ஸ்தலத்துக்கு' விரைந்த அமைச்சர்கள் தரையிறங்க 'முடியாமலே' திரும்பி போய்விட்டார்களாம். யார் யாரைத் தாக்கினார்கள்? கொன்றார்கள்? என்ற விபரங்கள் வெளியே வராதபடி தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் 'கருத்தொருமித்து' இயங்கிக் கொண்டார்கள்.

அனைவராலும் 'எதிர்பார்க்கப்பட்ட' இத் தாக்குதல்களின் பின்னணியை ஆராய்ந்தால் இத் தாக்குதல்கள் ஏன் நடாத்தப்பட்டன? யாரால் நடாத்தப்பட்டன? இவற்றினால் யார் இலாபமடைந்தார்கள்? என்பது தெளிவாகும்.

இலங்கையிலிருந்து இந்திய இராணுவத்தை 'வெளியே' எடுப்பதற்கான 'பேச்சுவார்த்தைகள்' ஆரம்பிப்பதற்கு முன்னரே 'மக்கள் தொண்டர் படைக்'கான 'ஆட் சேர்ப்பும்', பயிற்சியளிப்பும் இந்திய இராணுவத்தினாலும், இந்திய உளவுப்படைகளினாலும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இதிலிருந்தே இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னான 'வெற்றிடத்தை' நிரப்பி, இந்திய அரசின் நோக்கத்திற்கு உதவக்கூடிய 'இன்னொரு படை' தயாராக்கப்பட்டுவிட்டதை அறியலாம்.

அத்துடன் 'மீண்டும்' இந்திய அரசின் 'உதவியை' மக்கள் 'கோரக்கூடியதான' நடவடிக்கைகளை இந்திய அரசு திட்டமிட்டு நடத்தியது. இதன் ஒரு பகுதிதான் ரி.என்.ஏ- எல்.ரி.ரி.ஈ மோதலும், தமிழ்ப் பகுதிகளுக்கு இலங்கை இராணுவத்தின் வருகையுமாகும். அத்துடன் இலங்கை அகதிகளுக்காக 'மீண்டும்' மண்டபம் அகதிகள் முகாம் திறக்கப்பட்டிருப்பதும், அகதிகளின் வருகை ஆரம்பித்திருப்பதும் இந்த நோக்கங்களில் ஒன்றாகும்.

"தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு பாயப் போகிறது. தமிழ் மக்களுக்கு உதவக் கூடியது நாங்களே" என்று மார்தட்டக் கூடியதாக இந்திய அரசு 'நடந்துகொள்கிறது'.

ஏனைய இயக்கங்களையும், புரட்சிகர, முற்போக்கு சக்திகளையும் அழிப்பதற்காக எல்.ரி.ரி.ஈ.யுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவரும் இலங்கையரசு தனது நோக்கத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய இராணுவ வெளியேற்றத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீவிரப்படுத்தியுள்ளது. கலவரங்களை ஆரம்பித்து வைத்து, பின்னர் தமிழ் மக்களுக்குப் 'பாதுகாப்பளிக்க' இராணுவத்தை அனுப்பிவைத்துள்ளது. இலங்கை இராணுவம் மீண்டும் தமிழ்ப் பகுதிகளில் 'தாராளமாக' இயங்குவதற்காக ஏற்கெனவே எல்.ரி.ரி.ஈ இலங்கையரசுடனான 'பகைமைகளை' நீக்கியது குறிப்பிடத் தக்கது.

ரி.என்.ஏ.க்கு முனைப்பாக ஆட்கள் சேர்வதற்கும், இந்திய இராணுவம் இல்லாமல் போனால் ஏற்படும் 'பாதிப்புகளை' காட்டவும், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ கூட்டின் இராணுவமான ரி.என்.ஏ இலங்கை பொலிஸ் நிலையங்களைத் தாக்கியது. அத்துடன் முஸ்லீம்கள் படுகொலையில் இவையும் பங்கேற்றுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

ஆக மொத்தத்தில் இரண்டு அரசுகளும், அவை சார்பான இயக்கங்களும் தங்கள் நலன்களைப் பாதுகாக்க மக்களைத் தொடர்ந்தும் பலிக்கடாக்களாக்கி, அவர்களுடைய இரத்தத்தில் தங்களை 'வளர்த்துக்' கொள்கிறார்கள். இவற்றின் தொடர்ச்சியாகவோ திட்டமிட்டபடியோ எல்.ரி.ரி.ஈ.யிடம் வடக்கு 'ஒப்படைக்கப்படுவதும்', தனது நோக்கம் நிறைவேறியதும் இலங்கை இராணுவத்தை நேரடியாக ஏவியோ அல்லது மற்றைய 'இயக்கங்களைப்' பயன்படுத்தியோ எல்.ரி.ரி.ஈ.யுடன் இலங்கையரசு மோதுவதும், தொடர்ந்தும் இந்திய அரசினதும், ஏகாதிபத்தியங்களினதும் ஊடுருவல்கள் இருக்கப் போவதும் தற்போது தவிர்க்க முடியாதவையாக இருக்கலாம். ஆயினும் இந்த இரத்தக் களரிகளே என்றும் நிரந்தரமானவையாக இருக்கப் போவதில்லை.



## போலிகளின் சாயம் வெளுக்கிறது

கட்டுரையாளர் குறிப்பிட்டிருப்பதுபோல் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தாலும், இரத்தத்தாலும் எழுதப்பட்ட சோசலிஸத்தை கொர்பச்சேவ், டெங் என்ற இரு தனி மனிதர்களால் அழித்துவிட முடியாது. மாறாக சோசலிஸத்தின் வளர்ச்சியை இவர்கள் தற்காலிகமாக திசை திருப்பலாம் அல்லது தற்காலிகமாக முடக்கலாம்.

அனைத்து சோசலிச நாடுகளிலுமே — பொருளாதாரம் பாதாளத்தில் இருப்பதாக ஒட்டுமொத்தமாகக் கூறிவிட முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# கானல் நீர்

சு. சுகந்தி

கனகம் ரோட்டைப் பார்த்தவாறு நின்றாள். "என்னம்மா இவ்வளவு நேரமாய் அப்பாவை காணேல?" என்று கேட்டபடியே தாயிடம் வந்தாள் மாலதி.

"அதுதான் பாத்துக்கொண்டு நிக்கிறன். சிலவேளை நல்லயர் வீட்ட போவன் எண்டு சொன்னவர். பள்ளிக்குடம் விட்டு ஒரு மணித்தியாலத்துக்கு மேலயாச்சு. அங்கதான் போயிருப்பரெண்டு நினைக்கிறன்"

"என் இருந்தாப்போல நல்லயர் அண்ணையிட்ட?"

"உன்ரை குறிப்பை அவரிட்டக் குடுத்தனுங்கள். அதுதான் முடிவு கேக்கப் போயிருப்பர்"

"எனக்கேன் இப்ப கலியாணம்" என்று மாலதி சிணுங்க, "என்ன செய்ய வேணும், என்ன செய்யக்கூடாது எண்டு எங்களுக்குத் தெரியும். நீ உள்ளுக்க போய் அலுவலுகளைக் கவனி. போ" என்று கனகம் அவளை உள்ளே விரட்டினாள்.

மாலதி முணுமுணுத்தபடியே உள்ளே போனாள்.

'நாட்டு நிலமையளும் — அப்பிடி இப்பிடியிருக்குது. போனவிசயத்தை முடிச்சுக் கொண்டு வராமல் இந்த மனுசன் இவ்வளவு நேரம் என்ன செய்யிறார்' என்று கனகம் புறுபுறுத்துக்கொண்டிருந்தபோது கேட் திறக்கப்பட்டது.

"இவ்வளவு நேரம் எங்க போனனியள்? போன அலுவலை முடிச்சுக்கொண்டு கெதியில வரத்தெரியாதே" கனகம் குரலை உயர்த்தினாள்.

"நான் என்ன செய்ய? புரோக்கர் வீட்ட போவன் எண்டு சொல்லிப் போட்டுத்தானே போனனான். நான் அங்க போறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த மனுசன் வீட்டில இல்லை இப்ப வந்திடுவர் எண்டு மனுசி சொல்லிச்சிது. இவ்வளவு நேரமும் இருந்து பாத்தன். ஆள் வரேல. வந்தா என்னைப் பாக்கச்-சொல்லி மனுசியிட்ட சொல்லிப் போட்டு வந்திட்டன்" என்று மணியத்தார் மனைவிக்கு மேலால் கத்தினார்.

"அதுக்கேனப்பா கத்திறியள்" என்றாள் கனகம்.

"நான் எங்க கத்தினனான் பசிக்குது. சாப்பாட்டைப் போட்டுத் தா. பசிக்குது" என்றபடி சமையலறைக்கு விரைந்தார் - மணியத்தார்.

"மணியத்தார், மணியத்தார்" என்று கூப்பிட்டவாறு - நல்லையர் வரவும், மணியத்தார் சாப்பிட்டு முடித்து கை துடைக்கவும் சரியாக இருந்தது.

"வீட்ட இப்பதான் போனனான். நீங்கள் வந்திட்டுப் போனதாய் மனுசி சொன்னா. நானே வரவேணுமெண்டுதான் இருந்தனான். அதுக்குள்ள நீங்களே தேடி வந்திட்டியள்" நல்லையர் மூச்சு விடாமல் சொல்லி முடித்தார்.

"நான் சொன்ன விசயம் என்ன மாதிரி" என்று மணியத்தார் மெல்ல விசயத்துக்கு வந்தார்.

"அதுதான வந்தனான். அருமையான இடம். பெடியன் ஜேமனியில. பெரிய கோட்டலில வேலசெய்யிறன். மூத்த பெடி. அவனுக்கு கீழ இன்னும் இரண்டு பெடியள்தான். பொறுப்பெண்டு ஒண்டுமில்லை. சகோதரங்களும் வெளிநாட்டிலதான். நல்ல பெடி. குடிகிடி ஒண்டுமில்லை" என்று நல்லையர் அடுக்கிக்கொண்டு போக "பொறும் பொறும்" மணியத்தார் குறுக்கிட்டார்.

"தபால் கந்தோரில - வேல செய்யிற சூரியற்றை மகனே?"

"அவனேதான். உங்களுக்கு ஆளைத் தெரியுமே?" நல்லையர் கவலையுடன் கேட்டார். தெரிந்தவர்களாயிருந்துவிட்டால் தனக்கு நட்டமாகிவிடுமே என்பது அவர் பயம்.

"தெரியுமோவோ? அவன் என்னட்டை படிச்ச பெடியன். அருமையான பெடியன்தான்" என்றார் மணியத்தார்.

"பேந்தென்ன. நீங்களே பெடியனைத் தெரிஞ்சு -வைச்சிருக்கிறியள். அப்ப என்ன? தாய், தகப்பனை நாளைக்கே வரச் சொல்லட்டே? பொம்பிளையைப் பாத்துப் பிடிச்சால் மிச்சத்தை பேசி முடிக்கலாம்"

மணியத்தார் சம்மதமாக தலையசைத்தார்.

"சரி எனக்கும் நேரமாகுது. வீட்ட மனுசி பாத்துக்கொண்டிருக்கும்" என்றபடி நல்லையர் எழுந்தபோது "தண்ணி போட்டிட்டன்" உள்ளிருந்தபடியே குரல் கொடுத்தாள் கனகம்.

"இருந்து தண்ணி குடிச்சிட்டுப் போங்கோ நல்லையர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிள்ளை கெதியாக் கொண்டா ஆள் அவசரப்படுறார்" மணியத்தார் கத்தினார்.

மாலதி தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள். குடித்து முடித்ததும் "நாளைக்கு மூண்டு மணிக்கு ஆக்களை கூட்டி வாறன் ஆயத்தமாய் இருங்கோ" கூறிவிட்டு நல்லையர் போய்விட்டார்.

"வெளிநாடெண்டால் சீதனம் எக்கச்சக்கமாய் கேப்பினமே?" என்றபடி கனகம் உள்ளேயிருந்து வந்தாள்.

"அவனுக்குக் கீழ பெடியளெண்டபடியால் கனக்க கேளாயினம் எண்டு நினைக்கிறன். அப்பிடிக் கூடக் கேட்டாலும் என்ன செய்யிறது. குடுத்துச் செய்யத்தானே வேணும்? நல்ல பெடியன். விட்டால் பிறகு இப்பிடி ஆளைப் பிடிக்கேலாது" என்றார் மணியத்தார்.

"எல்லாத்தையும் மூத்தவளுக்குக் கொடுத்தா அவளுக்கு கீழ இருக்கிற மற்ற ரண்டுக்கும் என்ன செய்யிறதெண்டதையும் யோசியுங்கோ" கனகம் எச்சரித்தாள்.

"இவள் நல்லாயிருந்தால் தங்கச்சிமாரைப் பாக்க மாட்டாளே. எல்லாம் இனி அவளின்ரை கையிலதான்" என்றார் மணியத்தார் ஏதோ நம்பிக்கையுடன்.

"அவசரப்பட்டு கனவுகாணாதையுங்கோ. நாளைக்கு அவையள் வந்து பொம்பிளையைப்பிடிச்சிருக்கு எண்டு சொன்னாப் பிறகுதான் மிச்சம்" கனகம் மறுபடி எச்சரித்தாள்.

அவர்கள் இருவரும் கதைப்பதை மாலதி கேட்டுக் கொண்டிருந்தாள். மாப்பிள்ளை வாழப்போற பொம்பிளையைப் பாக்கத் தேவையில்லை. பொம்பிளையும் தனக்குப் புருசனாகப் போறவரை அறியத் தேவையில்லை. அம்மாவுக்கும், அப்பாவுக்கும் சரியெண்டால் சரி என்பதை நினைக்க மாலதிக்கு சிரிப்பாகவும் இருந்தது. தனது கருத்தைக் கேட்கிறார்களில்லையே என்று ஆத்திரமாகவும் இருந்தது.

அடுத்தநாள் மணியத்தார் பள்ளிக்கூடம் விட்டவுடனேயே வீட்டுக்கு வந்து ஆகவேண்டிய அலுவல்களைப் பார்த்தார்.

கனகம் இரண்டு மணிக்கே வடை சுடத் தொடங்கிவிட்டாள் மாலதி அம்மா தந்த புதிய சேலையை அணிந்துகொண்டிருந்தாள்.

மாப்பிள்ளை வீட்டார் சரியாக மூன்று மணிக்கே வந்துவிட்டார்கள். அவர்களுடன் நல்லையரும் வந்திருந்தார்.

மாலதி அவர்களுக்கு உண்டு, வுவகைகள், தேநீரைப் பரிமாறிவிட்டு கதவருகே நின்றாள்.

மாப்பிள்ளையின் அப்பாவும், அம்மாவும் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள் பிறகு மாலதியைத் தங்களுக்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிடித்திருப்பதாகச் சொன்னார்-கள்.

மணியத்தார் ஏற்கெனவே சொல்லிவைத்த ஐயர் தாமத-மாக வந்து சேர்ந்தார். அவரிடம் குறிப்பு, சாதகங்களைக் -கொடுத்தார்கள்.

"இப்பிடி நான் ஒரு குறிப்பும் பாக்கேல. நல்ல பொருத்தம். நாற்றுக்கு நாழ வீதம் சொல்லி வைச்ச மாதிரியே இருக்குது. நீங்கள் கண்ணை மூடிக் கொண்டு மகளைக் குடுக்கலாம் சந்தோசமாய் வாழும். நல்ல ராசியான பிள்ளை" என்று ஐயர் தனது வாய்ப்பாட்டை ஒப்பித்தார்.

பிறகு பேரம் ஆரம்பமாகியது.

"பொம்பிளைக்கு எல்லா நகையளும் செய்துபோட வே-ணும். ஒரு பரப்புக் காணி, இரண்டு இலட்சம் காசாய், பொம்பிளையை உங்கட செலவிலதான் ஜேமனிக்கு அனுப்ப வேணும்"

கனகத்திற்கு தலை சுற்றியது. மணியத்தார் எல்லாவற்றிற்கும் தலையை ஆட்டிக் கொண்டிருந்தார். இவர் என்னத்தை வைத்துக்கொண்டு எல்லாத்துக்கும் ஒம்படுகிறார் என்று கனகத்திற்கு புரியவில்லை.

"அப்ப எல்லாம் சரியெண்டால் வாற மாதம் மூண்டாந் திகதி நல்ல நாள். அண்டைக்குப் பொம்பிளையை அனுப்புவம். அதுக்கிடையில மற்றச் சம்பிரதாயங்களைச் செய்து முடிப்பம்" என்று சொல்லிவிட்டு மாப்பிள்ளை -வீட்டார் புறப்பட்டார்கள். வெளியேறுவதற்கு முன் மாப்பிள்ளையின் தகப்பன் மகனுடைய படத்தை அவர்களிடம் கொடுத்தார்

மணியத்தாரும், கனகமும் பார்த்துவிட்டு மாலதிக்கும் பார்க்கக் கொடுத்தார்கள். பின்னர் தம்பி, தங்கை என்று அது கைமாறிக் கொண்டிருந்தது.

"என்னப்பா, எல்லாத்துக்கும் ஒமெண்டிட்டியள். என்ன செய்யப் போறியள்?" என்று கனகம் கவலைப்பட்டாள்.

"கடன்தான்" என்று இலேசாக முடித்துவிட்டு போய்விட்-டார் மணியத்தார். "சகோதரங்களும் பெடியள்தான். அதுகும் வெளிநாட்டில. இவ்வளவு காசை வாங்கி அந்தக் கிழடுகள் போகேக்க கொண்டு போகப்போகுதுகளோ" என்று அவர் சொல்லிக்கொண்டு போனது கனகத்திற்கும் கேட்டது.

மணியத்தார் ஒரு மாதிரி மாறிச் சாறி அலுவல்களை முடித்துவிட்டார். மகளை அனுப்பிவைக்க வேண்டியதுதான் மிச்சமாக இருந்தது.

முதல் முதல் பிளேனில் பிரயாணம் செய்யப் போகும்சந்தோசத்துடனும், அறிமுகமில்லாத ஒருவரைச் சந்திக்கப் போகும் பயத்துடனும் மாலதியிருந்தாள். மணியத்தாரும், கனகமும் கலங்கிய விழிகளுடன் அவளை வழியனுப்பி வைத்தார்கள்.

www.tamilarangam.net



இலங்கையில்

"பேப்பரில என்ன விசேசம் போட்டிருக்கு?"

"மேல போட்டிருக்கு ஜனசவிய திட்டத்தின்படி வருமானம் இல்லாதவைக்கு ஆளுக்கு 2,500 ருபாப்படி குடுக்கப்போகினமாம். கீழ போட்டிருக்கு இலங்கை பட்ட கடன் 221,917 மில்லியன் ருபாவாம்"

— இன்னன்று.

மாலதி இரண்டு நாடுகளில் ஏறி, இறங்கி மேற்கு ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தாள். அவளை அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைத்தார்கள்.

மாப்பிள்ளையின் படத்தின் பின்பக்கத்தில் முகவரி, தொலைபேசி இலக்கங்களைக் குறித்துக் கொடுத்திருந்தார் மணியத்தார்

வந்தன்று மாலையே மாலதி படத்தில் குறிக்கப்பட்டிருந்த நம்பருக்கு போன் பண்ணினாள்.

மறுமுனையில் யாரோ எடுத்து "கலோ" என்றார்கள்.

"ஜீவாவோட கதைக்கலாமே?" மாலதி தயக்கத்துடன் கேட்டாள்.

"நான் ஜீவாதான் கதைக்கிறன்" என்றது மறுமுனை.

மாலதி தன்னைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தினாள். அவளைக் கூட்டிக்கொண்டுபோக இரவே வருவதாக ஜீவா கூறினான்.

சொன்னதுபோல் ஜீவா அவளைக் கூட்டிக்கொண்டுபோக காருடன் வந்தான். வீட்டை நோக்கிப் போகும்போது இருவரும் எதுவும் கதைக்கவில்லை.

வீட்டுக்கு வந்தவுடன் குளித்துவிட்டு வரும்படியும் தான் - தேநீர் போட்டுத் தருவதாக-வும் ஜீவா சொன்னான்.

"நான் குளிச்சிட்டு வந்து போட்டுத் தாறன்." என்றாள் மாலதி வெட்கத்துடன்.

"நீர் போட வேண்டாம் நான் போட்டுத் தாறன் எண்ணிறன். பேந்தென்ன கதைச்சுக் - கொண்டு நிக்கிறீர். தமிழிலதான சொன்னனான். விளங்கேலயே" என ஜீவா கறாராகப் பேசியதும் மாலதிக்கு திக்கென்று போய்விட்டது.

முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் போய் குளித்து, உடை மாற்றிக்கொண்டு .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்த மாமியார் சொன்னதுமா திரியே கொடியைக் கழட்டி — ஜீவாவிடம் கொடுத்தாள்.

"எத்தினை பவுண்?" என்று விசாரித்தான் ஜீவா.

"தெரியாது. உங்கட அம்மாவையள்தான் செய்து தந்தது" மாலதி பதிலளித்தாள்.

பின் இருவரும் தேநீர் பருகிக் கொண்டார்கள். முகம் கழுவிவிட்டு வருவதாக பாத்ரூமுக்குள் போன ஜீவா உடனே திரும்பி வந்தான்.

"பாத்ரூம் முழுக்க வெள்ளமாய் தண்ணி. உள்ளுக்கயோ, வெளியில நிண்டோ குளிச்சனீர்?"

அவன் பகிடிக்குக் கேட்கிறான் என்று நினைத்த மாலதி சிரித்தவாறே "உள்ளுக்குள்ள" என்றாள்.

"பல்லைக் காட்டாதை—யும். வெளியில நிக்கிற தண்ணியை குளிச்சு முடிச்சாப் பிறகு துடைச்சிருக்கலாந்தானே? இதுகளை உம்மட கொப்பரே வந்து செய்யப் போறார்" ஜீவா ஏசினான்.

இதென்ன செய்ததற்கெல்லாம் வந்தவுடனேயே ஏறி விழுகிறார் என்று எண்ணிய மாலதி அம்மா வழிக்கு வழி சொன்னது ஞாபகத்தில் வர பேசாமலிருந்தாள்.

இரவுச் சாப்பாட்டையும் ஜீவாவே தயாரித்தான். இருவரும் ஒன்றாகச் சாப்பாட்டு மேசைக்கு வந்தார்கள்.



மேற்கு ஜேர்மெனியில்

"எந்த நேரமும் பேப்பர்தான். எல்லாரும் எப்பிடியோ வேலை தேடியெடுத்து காசு சேத்துக் கொண்டிருக்கிறாங்கள். நீங்க பேப்பரோட கிடவுங்கோ"

"பொறப்பா. இலங்கையில டொலர் என்ன போகுது எண்டு பாத்துக் கொண்டிருக்கிறன். குழப்பாதை"

— இன்னன்று

ஜீவா கத்தியையும், கரண்டியையும் தந்ததும் அவற்றை — வைத்துக்கொண்டு மாலதி தயங்கினாள்.

"இனி இங்க கையால — சாப்பிடக் கூடாது. கரண்டி, கத்தி பாவிச்சு சாப்பிடுறதுதான் டீசன்ற்" என்று ஜீவா விளங்கப்படுத்தினான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாலதி தலையாட்டினள். எவ்வளவு முயன்றும் அவளால் கொட்டிச் சிந்தாமல் சாப்பிட முடியவில்லை.

"சுத்தப் பட்டிக்காடாய் இருக்கிறீர்"

மாலதிக்கென்று ஒருஅறையை ஒதுக்கிக் கொடுத்தான்.

"உம்மட சாமான்கள், படுக்கை எல்லாம் இதுக்குள்ளதான். ஐயரைப் பாத்து நாள் குறிச்சாப் பிறகு கலியாணத்தை வைப்பம்"

ஜீவா சொன்ன எல்லாவற்றிற்கும் மாலதி மௌனமாகத் தலையாட்டிக் கொண்டிருந்தாள் எங்கே அவன் ஏசுவானோ என்று பயமாகவிருந்தது.

அடுத்தநாள் ஜீவாவின்வீட்டுக்கு கீழே குடியிருக்கும் பானு அக்கா மாலதியைப் பார்க்க வந்திருந்தாள். ஜீவா வெளியே போயிருந்தான்.

இருவரும் ஊர்ப் புதினங்களைக் கதைத்துச் சிரித்தார்கள் நாட்டு நடப்புகளைப் பகிர்ந்து கொண்டார்கள். பானு அக்கா அவளுக்கு சமையல் முறைகளைக் கற்றுக் கொடுத்தாள்.

மூன்றும் நாளே மாலதி சமைக்கத் தொடங்கிவிட்டாள். ஜீவாவும் மறுபடி வேலைக்குப் போகத் தொடங்கி விட்டான்

அவர்களின் திருமணத்திற்கு இன்னும் இரண்டு மாதங்களின் பின்பே நல்லநாள் கிடைக்கும் என்று ஐயர் குறித்துக் கொடுத்திருந்தார்.

ஜீவாவும் வேலைக்குப்போனபின் மாலதி தனிமையிலேயே இருக்கவேண்டியிருந்தது. உடுப்புகளைத் தோய்ப்பது, சமைத்து வைப்பது போன்றவை அன்றாட வேலைகளாயிருந்தன. இடையிடையே பானு அக்காவுடன் கதைத்துக் கொண்டிருப்பதுதான் அவளுக்குச் சந்தோசமான நேரங்கள்.

ஒருநாள் தனது அறையிலிருந்து அவள் வீட்டுக்கு கடிதம் எழுதிக் கொண்டிருந்தபோது ஜீவா அங்கே வந்தான்.

"என்ன செய்யிறீர்?"

"வீட்ட கடிதம் எழுதுறன்"

"எப்ப பாத்தாலும் வீட்ட கடிதம் எழுதுறதுதான் வேலயே? ஊரிலயிருந்து நீர் இங்க வந்திட்டீர். இனிமேல் வீட்டுக்கு நீர் கடிதம் போடத் தேவையில்லை"

ஜீவா அந்த அறையைவிட்டுப் போனபின்தான் மாலதியால் கண்ணீர் விட முடிந்தது. அதன்பின்பு தனியாக இருக்கும்போதெல்லாம் அவள் தன்னுடைய வாழ்க்கையை நினைத்து அழ ஆரம்பித்தாள்.

ஒருநாள் தன்னுடைய நண்பனின் கல்யாண வீட்டுக்கு ஜீவா மாலதியையும் அழைத்துப் போனான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மண்டபத்தில் ஜேர்மன் ஆட்களும் இருந்தார்கள். ஜீவா அவர்களுடன் சிரித்துக் கதைத்து மாலதியையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினன்.

அவர்கள் மாலதியுடன்கை குலுக்கி அவள் பெயரை விசாரித்தார்கள். பாசை புரியாமல் மாலதி விழிக்க, ஜீவா பதிலளித்துச் சமாளித்தான். பிறகு அவளை ஒரிடத்தில் இருக்க வைத்து விட்டு அவன் போய்விட்டான்.

மாலதி இருந்த இடத்தி-லேயே இருந்து அங்கு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சில பெண்கள் அவளைக் காட்டித் தங்களுக்குள் ஏதோ குசுகுசுத்துக் கொண்டார்கள்.

எல்லாம் முடிவடைந்தபின் ஜீவா வந்து அவளை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வந்தான். வந்ததும் வராததுமாக தாறுமாறுக குதிக்கத் தொடங்கினன்.

"அங்க பாத்தனீரே? எல்லாரும் எவ்வளவு நகை போட்டிருந்தினம்? நீர் ரண்டு சோடி-தான் செய்துகொண்டு வந்திருக்கிறீர். என்ன உன்ரை மனுசிக்கு கையில, கழுத்தில ஒண்டும் இல்லையெண்டு அங்க எல்லாரும் - என்னை நக்கலடிக்கினம். டொச்காறர் உம்மைப் பேர் கேக்கினம். நீர் பேயைப் பாத்த மாதிரி முழுசுறீர். என்ரை மானம் போகுது. எங்கயோ இருந்த பட்டிக்காட்டை எனக்குக் கட்டி வைச்சிருக்கினம்"

அவளைத் திட்டி முடித்த ஜீவா பிறகு தனது பெற்ருரை ஏசினன்.

"கலியாணவீட்டை எத்தினை பொம்பிளையள் நிண்டவை. அவையளோட என் கதைக்ககேல? வாய்க்கை பவுண் வைச்சிருந்தனீரே?"

மாலதி தாங்க முடியாமல் அழுதுவிட்டாள். ஏற்கெனவே கோபமாயிருந்த ஜீவாவுக்கு அவளுடைய அழுகை இன்னும் எரிச்சலைத் தந்தது. பளாரென்று அவள் கன்னத்தில் அறைந்தான்.

அன்று தொடங்கியவன் பின்ர் தொட்டதற்கெல்லாம் அவளுடன் முரண்டு பிடித்து கைநீட்டி அடிக்கத் தொடங்கினன். அவள் ஏதாவது சொன்னல் "வாயாடி" என்று ஏசினன். ஒருநாள் அயன் பொக்சாலும் அவளுக்கு சுடு போட்டான்.

மாலதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எல்லாவற்றையும் பானு அக்காவிடம் சொல்லிக் கதறியழுதாள்.

பானு அக்கா தன்னுலியன் றவுரை அவளை ஆறுதல் படுத்தினள்.


தன்னை அப்பா, அம்மாவிடம் திருப்பியனுப்பி வைக்கும்படி மாலதி கெஞ்சினள். பானுஅக்காவுக்கு மாலதியின் வீட்டு நிலை-மைகள் தெரியும். மாலதி எல்லாவற்றையும் அவளுக்குச் சொல்லியிருந்தாள். அத்துடன் மாலதி

(தொடர்ச்சி 26 ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




1.01.89 (வீரகேசரி)

"இந்நாட்டில் வாழும் முதலாளிகளும் , அரசியல்வாதிகளும் தோட்டத் தொழிலாளர்களை அடிமைகளாக வைத்துக்கொண்டு தாம் சுகபோக வாழ்க்கை வாழ நினைக்கிறார்கள்" —ஐ.சோ.மு

"எமது பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ள நாம் ஏன் ஆயுதம் ஏந்தக் கூடாது? முஸ்லீம் குடும்பங்களிலிருந்து ஒரு இளைஞராவது நல்ல ஆயுதப் பயிற்சியை பெற்றுக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது?" — வடக்கு-கிழக்கு மாகாண சபையின் எதிர்கட்சி தலைவர்

02.11.89 (வீரகேசரி)

அநுராதபுரத்தில் 20க்கு மேற்பட்ட பெண்களின் சடலங்கள் உட்பட 50 சடலங்கள் காணப்பட்டன.

02.11.89 (தெ.நி.செ.பி)

நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவவேண்டுமெனக் கோரி உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களும் அமைதி ஊர்வலமொன்றை நடத்தினர். இந்திய இராணுவத்தினரும், மக்கள் தொண்டர் படையினரும் மக்களை பலாத்காரமாக ஊர்வலத்தில் ஈடுபடுத்தினர்.

03.11.89 (திசை)

தென்னிலங்கையில் 300க்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் பாதுகாப்புப் படையினரால் தேடப்படுகின்றனர்.

அம்பாறையிலுள்ள சிங்களவர்கள் குடியெழும்புமாறு மிரட்டப்படுகின்றனர். இந்திய படை வெளியேறிய பின்பு நடந்த இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

03.11.89 (தெ.நி.செ.பி)

காரைதீவில் மகேஸ்வரன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

03.11.89 (வீரகேசரி)

வடபகுதியிலே வாழும் விவசாயிகள் கடலிலே பிறந்து, கடலிலே வாழ்ந்து பரிதவித்து ஈற்றிலே கடலுடன் மடிகின்றார்கள். இவர்களில் தங்கியிருப்பவர்களின் கதி கூறத்தேவையில்லை—மல்லாகம் ஐக்கிய நாணய சங்கக் கூட்டத்தில்.

04.11.89 (வீரகேசரி)

பதுளை மாவட்டத்திலுள்ள 7 தேயிலைத் தொழிற்சாலைகள் இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 400மில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

05.11.89 (வீரகேசரி)

மாத்தளை மாவட்டத்தில் இனந்தெரியாத 31 சடலங்கள் வீதியோரத்தில் காணப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

06.11.89 (வீரகேசரி)

நாட்டின் பல பகுதிகளிலும் 48மணிநேரத்தில் 21 கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

07.11.89 (தெ.நி.செ.பி)

அம்பாறையில் கசன் என்ற எல்.ரி.ரி.ஈ.ஆதரவாளர் ஈ.என்.டி.எல்.எவ்வால் கொல்லப்பட்டார்.

07.11.89 (வீரகேசரி)

5.11.89இல் அம்பாறையில் டெலோ ஈ.பி.ஆர்.எல்.எவ் தளங்கள் சுமார் 250பேர் கொண்ட எல்.ரி.ரி.ஈஎனச் சந்தேகிக்கப்படும் ஆட்களால் தாக்கப்பட்டன.இத் தாக்குதலில் 22ஈ.பி.ஆர் எல்.எவ்,டெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.தொண்டர்படை,ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த 140பேர் அவர்களுடைய சொந்த ஆயுதங்களுடன் காணமல் போய்விட்டனர்.எல்.ரி.ரி.ஈ தரப்பில் 16பேர் கொல்லப்பட்டனர்.

08.11.89 (வீரகேசரி)

நாட்டின் பல பகுதிகளிலும் 48மணிநேரத்தில் 34 கொலைச் சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பேராதனையில் மீட்கப்பட்ட 14 சடலங்கள் அவசரகாலவிதிகளின்படி அழிக்கப்பட்டன.

09.11.89 (வீரகேசரி)

இனந்தெரியாதவர்களால் எரிக்கப்பட்ட நகவல டிப்போவில் 10 சடலங்கள் காணப்பட்டன.

"அம்பாறையில் கேந்திர நிலைகளில் நிலைகொள்ள 900 இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்."—வெளிவிவகார அமைச்சர்

"குடிக்க குழாய் நீர் வசதி இல்லாத லயங்களில் கூரையிலிருந்து மழைநீர் லயத்துக்குள் கொட்டுவதை நிறுத்த நிர்வாகங்கள் வழி செய்யவில்லை.படித்த இளைஞர்களின் சக்தி காட்டில் எறித்த நிலாவாக வீண் போகிறது"—ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்

10.11.89 (வீரகேசரி)

"வடக்கு,கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவம் தங்குவதானல் அதுபல்லின மக்களையும் கொண்ட படையாக இருக்கும்வரை மாகாணசபையின் இணக்கத்துடனே நிறுத்தப்பட வேண்டும்"—யாழ் எம்.பி

"முஸ்லீம் பெரும்பான்மை மாகாணமே கிழக்கு மாகாண முஸ்லீம்களின் பிரச்சினைக்குத் தீர்வாகும்"—அஷ்ரப்

11.11.89 (வீரகேசரி)

மாறம்பைக் குளத்தில் அப்துல்லா உதுமான் என்ற குடும்பஸ்தர் அடித்துக்கொல்லப்பட்டார்.

கடுகண்ணாவைப் பகுதியில் 6பேரின் சடலங்கள் காணப்பட்டன.

எலமுல்ல தேயிலைத் தொழிற்சாலைஇனந்தெரியாதவர்களால் எரிக்கப்பட்டுள்ளது

12.11.89 (வீரகேசரி)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள குடியிருப்பு எனும் கிராமத்தில் அமைந்துள்ள ஈழவர் ஜனநாயக முன்னணியின் அலுவலகம் மீது தமிழ்த் தேசிய இராணுவத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.ஈ.ஜ.மு.உறுப்பினர்களும் பதில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.இருவர் கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

13.11.89 (வீரகேசரி)

இலங்கையிலுள்ள இஸ்ரேல் நலன் பேணும் பிரிவை முடிவிட வேண்டுமென வடமேல் மாகாணசபையில் முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர் கொண்டுவந்த பிரேரணை 2 வாக்குகளால் தோல்வியடைந்தது.

நாட்டின் பல பகுதிகளிலும் 72மணிநேரத்தில் 85 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

13.11.89 (தே.நி.செ.பி)

வெல்லாவெளியில் பரமரட்ணம், பாருக் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

14.11.89 (வீரகேசரி)

கல்முனையில் இஸ்மதீன் என்பவரும், அவரது மனைவியும் இனந்தெரியாத ஆயுதக்குழுவினால் கடத்தப்பட்டுள்ளனர்.

14.11.89 (தினபதி)

வெலிமட நகரப் பகுதியில் துண்டிக்கப்பட்ட 20 கைகள் காணப்பட்டன.

15.11.89 (வீரகேசரி)

மாத்தறை மாவட்டத்தில் இதுவரை காணாமல் போயுள்ள 216பேரையும் தேடித் தருமாறு பெற்றோர்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

இனந்தெரியாதவர்களால் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த விக்னேஸ்வரனுக்கு வவுனியாவில் மக்கள் அஞ்சலி செய்தனர்.

இனந்தெரியாதவர்களால் கடத்திச்செல்லப்பட்ட கல்முனை சாகிறக் கல்லூரி அதிபர், இஸ்மதீன் தம்பதிகள், மன்சூர் ஆகியோரை நிபந்தனையின்றி மனிதாபிமானத்தின் பேரால் விடுவிக்கும்படி சாகிறக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

16.11.89 (வீரகேசரி)

சம்மாந்துறை மாவட்டத்தில் 3பொலிசார் கொல்லப்பட்டதையடுத்து அங்கு இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது.

கண்டிப் பகுதியில் 10 சடலங்கள் காணப்பட்டன.

அங்கும்புர என்ற இடத்தில் 30 சடலங்கள் கிடந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

17.11.89 (திசை)

ரோகணவிஜயவீர கைது செய்யப்பட்ட உல்பன பகுதியில் ஜே.வி.பி.யினர் 52 பொதுமக்களைக் கொன்று குவித்துள்ளனர்.

17.11.89 (வீரகேசரி)

ஜே.வி.பி.க்கு உதவியவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது தடுக்குமுகமாக அவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் விமான நிலைய அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

"இலங்கையில் ஒவ்வொரு 10,000பேருக்கும் 100 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்" —சு.க.எம்.பி

18.11.89 (வீரகேசரி)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று, சம்மாந்துறை, சவளக்கடை, கல்முனை ஆகிய இடங்களிலுள்ள 4 பொலிஸ் நிலையங்கள் மீது ஏக காலத்தில் திடீர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. 30பேர் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

22.11.89 (வீரகேசரி)

மட்டக்களப்பில் ரவிதாசன் என்பவரும், நாவற்குடாவில் ஞானச்சந்திரன், திருமால் ஆகியோரும் இனந்தெரியாதவர்களால் கொல்லப்பட்டுள்ளனர்.

மறைந்த யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியை ராஜனி திரணகமவின் மறைவை நினைவுகூருமுகமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊர்வலத்தில் சுமார் 2,000 பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். கொழும்பு பல்கலைக்கழகங்களை சேர்ந்த சிங்கள மாணவ, மாணவிகளும் இதில் பங்குபற்றினர்.

"உலக வங்கியை அரசாங்கம் நாடுவதில் வெட்கப்படுவதற்கு எதுவுமில்லை. அஞ்சுவதற்கு எதுவுமில்லை"—பாராளுமன்றத்தில் பொதுநிர்வாக ராஜாங்க அமைச்சர்.

நெடுந்தீவைச் சேர்ந்த திருஞானதீபன், அருள்ஞானம் ஆகியோர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

"எம்.பி.க்களின் பாதுகாப்புக்காக 15 இலட்சம் கொடுக்கப்படுகிறது" — பாராளுமன்றத்தில் உல்லாசப் பணயத்துறை அமைச்சர்.

23.11.89 (வீரகேசரி)

அம்பாறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள 20,000க்கும் அதிகமானவர்கள் உணவு சுகாதார, படுக்கை வசதிகளின்றி பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளனர். மருதமுனை, சாய்ந்தமருது, கல்முனை குடி பகுதிகளில் சுமார் 30,000 முஸ்லீம்கள் அங்கிருந்து கடந்த 3 வாரங்களாக இருப்பிடங்களைவிட்டு வெளியேறாமல் முடங்கிக் கிடப்பதால் உணவுப் பஞ்சம் ஏற்படும் அறிகுறிகள் தோன்றியிருக்கிறது. இவர்களில் 70சதவீதமானோர் நாளாந்தம் கூலித் தொழில் செய்து பிழைக்கும் தொழிலாளர்களாவர்.

"ரோகணவிஜயவீரவின் ஆடம்பர வாழ்க்கையை அரசாங்கம் மக்களுக்கு இப்போது காட்டுகின்றது. ஒளிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறான வாழ்க்கையை அவர் நடத்த வேண்டியிருந்தது. அரசாங்கத் தரப்பினரும், நாங்களும் எவ்வாறு வாழ்கின்றோம்? எங்களது வாழ்க்கைமுறையை மக்கள் அறிவார்களேயானால் எங்களால் தொகுதிகளுக்குச் செல்ல முடியுமா?"—பாராளுமன்றத்தில் சு.க. எம்.பி

கல்முனையைச் சேர்ந்த பிரேமச்சந்திரன் என்ற 15வயது மாணவன் பிணமாக கடற்கரையில் மீட்கப்பட்டான். இந்த மாணவர் அடித்துக் கொல்லப்பட்டதுடன் இரு கண்களும் தோண்டப்பட்டு, காதுகளும் அறுக்கப்பட்டுள்ளன.

24.11.89 (திசை)

"முன்னர் மனித உரிமைகள் மீறப்படுவதென்பது அரசு தனது பிரஜைகளுக்கெதிராக நடத்திய ஒடுக்குமுறைகளையே சுட்டியது. தற்போது அவ்வாறல்லாது ஆயுதம் தாங்கிய குழுக்களினால் இந்த ஒடுக்குமுறை நடைபெறுவது ஒரு பிரதானகுணரீதியான வித்தியாசமாகும். மனித உரிமைக்காகப் போராடும் சில ஸ்தாபனங்கள் இக்குழுக்களின் அடக்குமுறைகள் பற்றி கண்டனம் தெரிவிக்காது வந்ததன் காரணம் அவை விடுதலைப் போராட்டத்தோடு சம்பந்தப்பட்டவை என்பதால். இவற்றைக் கண்டிக்காது விட்டால் எதிர்காலத்தில் சர்வாதிகார அரசுகள் தோன்றுவதற்கு வழிவகுப்பதாக அமைந்துவிடும்"—ராஜனி திரணகமவின் நினைவுநாள்தினத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தில் ரெஜி சிறிவர்த்தன

25.11.89 (வீரகேசரி)

யாழ்ப்பாணத்தில் ஏ.மரியநாயகம் என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ் பெரியாஸ்பத்திரி நாலாம்வாட்டில் வைத்து ஜெகதீஸ்வரன் என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

27.11.89 (வீரகேசரி)

முல்லைத்தீவில் சுவாமிநாதன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த ஒரு மாதகாலத்தில் 852 கொலைகள் இடம்பெற்றுள்ளன.

கம்பகா மாவட்டத்தில் 15 இனந்தெரியாத சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

30.11.89 (வீரகேசரி)

கிழக்கில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக தெற்கு நோக்கிவந்து அங்கு அகதிகள் முகாமில் கடந்த 3 ஆண்டுகளாகத் தங்கியிருந்த 101சிங்களக் குடும்பங்கள் மீண்டும் வசபிபதற்காக கிழக்கிலங்கை சென்றுள்ளன. இக்குடும்பங்களுக்கு கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணியைப் பகிர்ந்தளித்து அங்கு குடியமர்த்த ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.



## நூல் அறிமுகம்

# மனிதம்



②

தொடர்புகட்கு :

**Manitham**
Zentrum 5 (Z 5)
Unterstützungsverein
Postfach 8542
3001 Bern
SWITZERLAND



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பப் போவதால் என்ன பாதிப்புகள் ஏற்படும் என்பதையும் பானு அக்கா சிந்தித்துப்பார்த்தாள்.

மாலதியின் பிரச்சினை பற்றி தனது கணவருடனும் கலந்தாலோசித்தாள் பானு அக்கா இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

"இஞ்ச இருந்து இருநூறு கிலோமீற்றர் தள்ளி என்ரை அக்கா இருக்கிறா. ஜீவாவுக்குத் தெரியாமல் நான் உம்மை அங்க கொண்டுபோய் விடுறன். நீர் அங்க வேலையும் செய்யலாம்." என்று தங்கள் திட்டத்தை மாலதிக்குத் தெரிவித்தாள் பானு அக்கா.

மாலதி திடுக்கிட்டாள். "பேந்து இவர் என்னைத் தேட மாட்டாரே? பொலிசுக்குச்சொல்ல மாட்டாரே?"

"இஞ்சத்தை முறைப்படி அவர் உம்மை இன்னும் றிஜிஸ்ரர் பண்ணயில்லை. அதால அவர் பொலிசுக்குப் போகேலாது. ஆறு.... உமக்கு இன்னும் ஒன்டும் இல்லைத்தானே?" என்று பானு அக்கா கேட்க, மாலதிக்குப் புரியவில்லை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்ன?"

"நீங்க ரெண்டு பேரும் இன்னும் ஒண்டாய் படுக்கேலத்-தானே?" என்று பானு அக்கா விபரமாய் கேட்க, மாலதி புரிந்து "இல்லை" யென்றாள்.

"அப்ப சரி. நீர் உங்கட வீட்டுக்கு விபரமாக ஒரு கடிதம் போடும். நான் அக்காவுக்குப் போன் பண்ணி விசயத்தைச் சொல்லுறன்" பானு அக்கா அவளைத் தைரியப்படுத்தி விட்டுப் போய்விட்டாள்.

மாலதிக்குப் பயம் போகவில்லையாயினும் ஜீவாவால் இதுவரை அனுபவித்த சித்திரவ-தைகளால் இனியும் அவனுடன் வாழ முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டாள்.

அடுத்தவாரம் பானுவின் அக்கா மாலதியைக் கூட்டிச்செல்ல வந்துவிட்டாள்.

"வீட்ட ஒரு கடிதம் எழுதியிருக்கிறன். எழுதினது சரியோ எண்டு நீங்க பாத்திட்டு அனுப்பி விடுங்கோ" என்று தான் எழுதிய கடிதத்தை பானு அக்காவிடம் கொடுத்தாள் மாலதி. பானு அக்காவை விட்டுப் பிரியும்போது தனது கூடப் பிறந்த சகோதரியைப் பிரிவதுபோல் மாலதி கத்தியே அழுதுவிட்டாள். பானு அக்கா அவளைத் தைரியப்படு-த்தி அனுப்பினாள்.

மாலதி போனதும் அவள் தந்த கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள்

அன்பின் அப்பா, அம்மா, தம்பி, தங்கைமாருக்கு,

நான் நலம் என்பதற்கில்லை. உங்கள் நலம் எப்படி? இவ்வளவு நாளாகக் கடிதம் - போடாததற்குக் குறை நினைக்கவேண்டாம். உங்கள் அருமை மாப்பிள்ளை உங்களுக்கு கடிதம் போடக் கூடாது என்று கூறிவிட்டார். மேலும் இக்கடிதத்தை - உங்களுக்கு எழுதுவதற்கு காரணம் நான் அவனைவிட்டுத் தனியே போய்விட்டேன்.

அப்பா, உங்கள் மாணவன் குடி வெறி இல்லாதவன். நல்ல பெடியன். நீ அவனை முடித்தால் பின் தங்கைமாரைப் பார்ப்பாய் என்று முன்பின் தெரியாத ஒருவனுக்கு என்னைக் கட்டிவைத்தீர்கள். நீங்கள் நினைத்ததுபோல் இல்லை. குடிவெறி உள்ளவனை கட்டியிருந்தால் வெறி இருக்கும் வரைதான் சித்திரவதை. ஆனால் இவனோ எந்த நேரமும் என்னை சித்திரவதை செய்தான். உடம்பில் காயம் வருமளவிற்கு அடிப்பான்.

நான் வாய் காட்டியிருப்பன் என்று நீங்கள் நினைக்கலாம். இலங்கை மாதிரியே இங்கும் நான் சாப்பாட்டுக்குத் தவிர வேறு ஒன்றிற்கும் வாய் திறப்பதேயில்லை.

பட்டிக்காட்டைத் தன்னுடைய தலையில் கட்டிவிட்டார்களாம். சமைச்சாலும் குற்றஞ் - சொல்லுவார். வீடு கூட்டினாலும் குற்றஞ் சொல்லுவார். எந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரமும் ஏச்சுத்தான். இனியும் என்னால அவனோட வாழ முடியாது.

அதால என்னோட கூடப் பிறக்காத சகோதரி ஒருவரோடு போகிறேன்.

அப்பா, இனிமேலாவது – வெளிநாட்டு மாப்பிள்ளை என்று தங்கைமாருக்கு பேசி அனுப்ப வேண்டாம். ஏமாத்து வேலை செய்யாமல் வேறு ஒழுங்கான– வேலை பார்க்கச் சொல்லிப்– புரோக்கரிட்ட சொல்லுங்கோ.

சும்மா இரண்டு புத்தகத்தைப் பார்த்துவிட்டு இனி இல்லையென்ற பொருத்தம் என்று ஐயர் சொன்னாரே. இப்ப என்னுடைய வாழ்க்கையைப் போல சீரழிஞ்ச வாழ்க்கை வேறயாருக்கும் அமையக் கூடாது.

இனியாவது வெளிநாட்டு– மாப்பிள்ளை என்று தயவுசெய்து விழுந்தடிக்க வேண்டாம். தங்கச்சிகளையாவது காப்பாற்றுங்கோ. நடந்தது நடந்துவிட்டது. நீங்கய் யோசிக்க வேண்டாம். நான் இனிச் சந்தோசமாயிருப்பேன் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. பின்பு உங்களுக்கு விலாசம் எழுதுகிறேன்.

இப்படிக்கு
மகள்

மாலதி.

பானு அக்கா கடிதத்தை மடித்து உறைக்குள் வைத்து மூடினாள். தபாலில் சேர்ப்பதற்–காக வெளியே போகும் கணவரிடம் அதைக் கொடுத்து விட்டாள்.



மன்னர் ஆட்சிக் காலத்தில்

"கடவுள் உருவங்கள் வரைந்த ஓவியங்களை வாங்கி வரச் சொன்னேனே ? எங்கே அவை?"

"கடவுளை இதுவரை தான் பார்க்காததால் எப்படி வரைவது எனத் தெரியவில்லை என ஓவியர் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார் மன்னவா"

"முட்டாள் ஓவியன். நான் மட்டும் கடவுளைக்கண்டேனா என்ன? மனிதர்களிலிருந்து கடவுளை வேறுபடுத்திக் காட்டுவதற்காக நான்கு கைகள், மூன்று கண்கள் என்று எல்லாவற்றையும் அதிகமாக வைத்து வரையச் சொல். மக்களை பயமுறுத்துவதற்காககப் பயங்கரமானதாகவும் இருக்க வேண்டும். நாங்கள் எதைக் காட்டுகிறோமோ அதுதான் மக்களுக்கும் கடவுள். புரிகிறதா?"

– இன்னன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெறுக்கிறது போலிகளின் சிவப்புச் சாயம்

"மார்க்ஸியம் பேசுவதற்கினியது, ஆனால் நடைமுறைக்கு உதவாது, அது குப்பையில் வீசப்பட வேண்டியது" என்றும், "முதலாளித்துவமே நிலையான, நிரந்தரமான பொருளாதார அமைப்புமுறை" எனவும் முதலாளித்துவ ஆய்வாளர்கள் மார்க்ஸிஸத்தை அணுஅணுவாகத் திரித்துக்கொண்டிருந்தபோது, மார்க்ஸியத்திற்கு நடைமுறை எனும் உயிர் கொடுத்து உரமூட்டி, உலகில் முதன் முதலாக சோசலிஸ நாடொன்றை மாபெரும் ஒக்ரோபர் புரட்சி மூலம் வென்றெடுத்தார் தோழர் லெனின்.

ஒக்ரோபர் புரட்சியானது மார்க்ஸியம் தொடர்ந்தும் உயிர் வாழ முடியும் என்பதையும், முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து (சுரண்டலிலிருந்து) உழைக்கும் வர்க்கம் தன்னை விடுவித்துக் கொள்வது தவிர்க்க முடியாதது என்பதையும் நடைமுறை ரீதியாக நிரூபித்துக் காட்டியது

ஒக்ரோபர் புரட்சியைத் தொடர்ந்து "ரஷ்யாவில் தான் சோசலிஸம் சாத்தியமாயிற்று, ஏனைய நாடுகளுக்கு அது பொருந்தாது" (இப்படி தற்போது எம்மவரிலும் சிலர் கூறுவதைக் காணலாம்) என முகங் குப்புற விழுந்த நிலையிலும் பிரச்சார பீரங்கிகளை ஏவிவிட்ட முதலாளித்துவவாதிகளை மாவோசேதுங் தலைமையிலான சீனப் புரட்சி புறமுதுகிட்டு ஓடச் செய்தது.

இவ்விரு நாடுகளினதும் விடுதலையானது வர்க்கப் போராட்டத்தையும், காலனிய நாடுகளில் தேசிய விடுதலைப் போரையும் தீவிரமடையச் செய்ததுடன் இவ்வாறான போராட்டங்களுக்கு இருநாடுகளுமே நேசக்கரம் கொடுத்து உதவின.

- வி. நடராஜன் -

ஆனால் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தினாலும், இரத்தத்தாலும் எழுதப்பட்ட சோசலிஸம் இன்று ஆட்சிக் கட்டில்மர்ந்திருக்கும் 'சோசலிஸத் தலைமைத்துவர்'களாகிய கொர்பசேவ், டெங் கும்பல்களால் அழிக்கப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனியென்ன! தலைவர்களே சோசலிஸத்திலிருந்து தவறிவிட்டார்களாம். பாவம் தொண்டர்கள் என்ன செய்வார்கள்? கிழக்கு ஐரோப்பிய அரசாங்கங்களும் தலைவர்கள் வழியே முதலாளித்துவத்தை முடுக்கி விடுவதில் (போலிகளின் வார்த்தைகளில் சொல்வதானால் ஜனநாயகத்தை முடுக்கி விடுவதில்) முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன.

ஏகாதிபத்தியத்திற்கு கதவை அகலத் திறந்துவிட்ட சீன டெங் கும்பல் நாட்டில் வாழும் எல்லோரையும் பணக்காரர்கள் ஆக்கப் போகிறோம் எனப் புறப்பட்டு நாட்டையே பட்டினிக்குரிய நாடாக்குகிறது. அது மட்டுமன்றி டெங் கும்பலின் இவ்வாறான போக்குகளால் மூலையில் முடங்கிக் கிடந்த முதலாளித்துவவாதிகளும் உயிர்பெற்று தமது தில்லுமுல்லுகளை அமெரிக்க, மேற்கைரோப்பிய ஏகாதிபத்தியங்களின் பன்முக ஆதரவோடு மிகவும் வெற்றிகரமாக நிகழ்த்தி வருகின்றனர்.

இதில் ஓர் அங்கமாகவே தியன் ஆன் மென் சதுக்கத்தில் நடைபெற்ற சீன மாணவர்களின் போராட்டத்தையும் பார்க்க முடியும். ஆரம்பத்தில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இறுதியில் வலுவடைந்து 'நிறைவான முதலாளித்துவத்தை' சீன மாணவர்கள் கோருவதைக்கண்டு பீதியடைந்த டெங் கும்பல் மாணவர்களிடையே ஏகாதிபத்திய, எதிர்ப்புரட்சிகர சக்தி நுழைந்துவிட்டது என்ற பம்மாத்துடன் அடக்குமுறை இயந்திரங்களில் ஒன்றான இராணுவத்தை ஏவி - நூற்றுக் கணக்கான மாணவர்களைப் படுகொலை செய்ததுடன் ஆயிரக்கணக்கான மாணவர்களை சிறையிலடைத்தது.

சோசலிஸத்திற்கு எதிர்ப்பகைமுகாமான, என்றும் ஒன்றுடன் ஒன்று இணைய முடியாத - ஏகாதிபத்தியங்களுடன் கூடிக்குலவும், முதலாளித்து அமைப்புமுறை வடிவங்களை ஏற்று அதைச் சீனாவில் நடைமுறைப்படுத்தும் டெங் கும்பல் மாணவர்களின் போராட்டத்தையடக்க தனக்கு யோக்கியதை இல்லாததைப் புறக்கணித்துவிட்டது.

ஆட்சியதிகாரத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்றால் இராணுவத்தையென்ன, முப்படைகளையும் வைத்தே நாட்டை சுடுகாடாக்குவார்கள் என்பதற்கு தியன்ஆன்மென் சதுக்கப் படுகொலைகள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

'பெரஸ்ரோறிக்கா' 'கிளாஸ்நோஸ்ற்' என்பவை காலவதியாகிக் கொண்டிருக்கும் - கொர்பச்சேவ் ஆட்சியின் கடைசி ஆயுதங்களாகும். இதுவும் சீனாவுக்குப் போட்டியாக ரஷ்யாவும், ரஷ்யாவுக்குப் போட்டியாக சீனாவும் நடைமுறைப்படுத்தும் திட்டங்களாகும்.

இவ்விரு நாடுகளிலுமே இத் திட்டங்கள் பிசுபிசுத்துப் போகின்றன. சீனாவைப் போலவே -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"மனிதர்கள் எப்படியெல்லாம் கஷ்டப் படுகிறார்கள் என்ற நிகழ்ச்சிக்காக நீங்கள் எப்படி 5 ஓட்டல்கள், 10கடைகள் கட்டியுள்ளீர்கள் என்பதைப் பற்றி பேட்டி காண வந்திருக்கிறோம்"

— இன்னன்று

பொருளாதார சீர்திருத்தங்கள் யாவும் முடங்கிய நிலையில் மக்கள் தமக்குத் தேவையானபொருட்களுக்கு கடைகளில் நீண்ட வரிசைகளில் நிற்க வேண்டிய நிலைமாறி தற்போது அத்தியாவசியப் பொருட்களுக்கே திண்டாடவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, கொர்பச்சேவின் கிளஸ்நோற் கொள்கையால் முதலாளித்துவ சக்திகளின் தூண்டுதலின் பேரிலும் கொர்பச்சேவ் கும்பலின் — பொருளாதார வங்குரோத்துக் காரணமாகவும் தேசிய இனங்கள் பல பிரிந்து செல்வதற்காகப் போராடுகின்றன.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருந்துகொண்டும், தேசிய இனங்களை இராணுவம், பொலிஸ் போன்றவற்றினால் அடக்கிக்கொண்டும் தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளும் இக்கும்பல் மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்தல் என்பதற்கு மாறாக அனைத்திற்கும் அடக்குமுறை இயந்திரங்களென முதலாளித்துவ முறையைக் கையாள்வதோடு, அமெரிக்காவை மிஞ்சுமளவிற்கு ஏவுகணைகளை — விட்டு மார் தட்டிக் கொள்கிறது.

நாடு என்ன பாடுபட்டாலென்ன, உலகில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிற்கு நிகரான 'வீரனாக' திகழ வேண்டும் என்பதற்கிணங்கவே கோர்பசேவ் நாட்டையும் மக்களையும் ஆள்கிறார்.

இத்தகைய கோர்பச்சேவை புது லெனினாக வர்ணிக்கிறார்கள் இளைய மார்க்ஸிஸ்டுகள் — எனத் தங்களைக் கூறிக் கொள்பவர்கள். ஒடுக்கப்படும் மக்களும், சோசலிஸ முகத்திரை கிழிக்கப்பட்ட போலிகளுக்கு எதிராகப் போராடும் உழைக்கும் வர்க்கமும் இந்த 'இளையமார்க்ஸிஸ்டுகள்' எந்த வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்பதை இனங்காண இது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

கொர்பச்சேவ், டெங் கும்பல்களைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் — தலைவர்களும் இவர்களின் பல்ல

www.tamilarangam.net

வியையே பாடுகின்றனர். கிழக்கு ஐரோப்பாவின் பொருளாதாரம் பாதாளத்தில் இருப்பதால் மேற்கு ஐரோப்பியநாடுகள் வெகு இலகுவாக தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றன.

கிழக்கு ஐரோப்பியநாடுகளிலிருந்து வருபவர்களுக்கு அரசியல் அந்தஸ்து கொடுத்து, அங்கு மக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிட்டு முதலாளித்து அமைப்புமுறையை நிலைநாட்ட இந்நாடுகள் துடிக்கின்றன.

இதற்கு முன்னுதாரணமாக கிழக்கு ஐரோப்பாவில் சோசலிஸம் அல்லாத ஒன்றை அமைக்கும் 'பெருமையை' போலந்து பெறுகின்றது. இங்கு அமைக்கப்பட்ட அரசாங்கம் 'கொம்யூனிஸ தனியாதிக்கத்தின் சவப்பெட்டி மீதான கடைசி ஆணி' என முதலாளித்துவவாதிகள் கருதுமளவிற்குச் 'சரித்திர முக்கியத்துவம்' வாய்ந்ததாகிவிட்டது. இந்த முதலாளித்துவ அரசமைப்பிற்கு ரசியாவின் அங்கீகாரம் கிடைத்தது ரஷ்ய ஆளும் கும்பலின் அரசியல் நிலைப்பாட்டைத் துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளது.

ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலானவைகளும் படிப்படியாகத் தங்களுடைய சிவப்புச் சாயத்தைக் கழுவி வருகின்றன. இந் நிலையிலிருந்து சிறிது முரண்டு பிடிக்கும் கிழக்கு ஜேர்மெனியையும் அகதிகளின் 'இறக்குமதி' மூலம் — ஏகாதிபத்தியம் பணியவைக்க முயல்கின்றது.


போலிச் சோசலிஸவாதிகளின் சாயம் வெளுத்த நிலையில் மீண்டும் ஏகாதிபத்தியம் தற்காலிக வெற்றியைப் பெற முயல்கின்றது. மார்க்ஸிய வரலாற்று ஆசான்கள், அவர்களுடைய சித்தாந்தங்களைக்கொண்டு எத்தனையோ இழப்புகளுக்கு மத்தியில் வரலாற்றைப் படைத்தவர்களெல்லாம் இந்த நாற்காலிப் அரசியல் பச்சோந்திகளுக்குப் — பழமைவாதிகளாகத் தெரிகிறார்கள்.

ஏகாதிபத்திய முதலாளித்துவவாதிகளிலிருந்து கத்தோலிக்க மதத் தலைவர் பாப்பரசர் வரை (கர்த்தரின் தூதுவருக்கு கூட கொம்யூனிஸம் அழிவதில் மகிழ்ச்சி என்றால் இத் தூதர் யார் என்பதை விவரிக்க வேண்டிய அவசியம் இல்லை) கொம்யூனிஸம் இறந்துவிட்டது, இனி உலகில் கொம்யூனிஸம் தலையெடுக்க முடியாது என்ற அறுந்து போன ஒலிப்பதிவு நாடாவை மீண்டும் பொருத்தி பிரச்சாரம் செய்கின்றனர்.

இது ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்ட தற்காலிக வெற்றியெனினும், வரலாற்றுச் சக்கரங்கள் பின்னோக்கிச் சுழல்வதில்லை என்பதை நிலைநிறுத்த ஏகாதிபத்திய, தரகு அதிகார வர்க்கத்திற்கெதிராகவும், போலி சோசலிஸவாதிகளுக்கெதிராகவும் உலகத் தொழிலாளர்கள் ஒன்று சேர்வார்கள்.

www.tamilarangam.net





# கனவை மிதித்தவன்

- பார்த்திபன்

அழைப்பு மணி விடாமல் அழைத்தது. யாரும் அசைவதாய்க் காணேம். மணியடிப்பவரும் விடுவதாயில்லை.

நீண்ட நேரத்தின் பின் பாலகுமாரின் போர்வை ஆடியது. "ஆரடாப்பா இது சாமத்தில வந்து நிண்டு பெல்லடிச்சுக் கொண்டு நிக்கிறுங்கள்?"

மேல் கட்டிலும் இப்போது உயிர்த்தது. "சாமம் என்ட படியால் பேய், பிசாசாய்தானிருக்கும். ஆனு அதுகளுக்கென்னெண்டு எங்கட பெல் தெரியும்?"

"வரேக் டோச் லைற் கொண்டு வந்திருக்கும். இப்ப நடுச் சாமமோ? உழக்கு வாங்கப் போறியள். மத்தியானம் பன்ரண்டு மணி" என்றுன் முத்து கட்டிலில் எழுந்து உட்கார்ந்த படி.

"உவன் பேக்காட்டுறுன். இப்பதான் படுத்தனுங்கள். அதுக்குள்ள மத்தியானம் ஆச்சே?" கேட்டான் பாலகுமார் போர்வையே விலக்காமலே.

"அதுதானே" என்றுன் மேல் கட்டில் ஞானம்.

"நீங்க இப்ப படுத்தாப் போல விடியிறது பிந்த வேணுமாக்கும். ராத்திரி ஒழுங்கா அலுவல் பாத்திருந்தா நேரத்தோட வந்து படுத்திருக்லாந்தானே? நிண்டு வாயடிச்சுப்போட்டு மூண்டு மணிக்கு வந்து படுத்தா விடியிறதெங்க தெரியப்போகுது" சொல்லியபடியே முத்து எழுந்து போய் கதவைத்திறந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியே எதிர் அறைக் குமார் நன்ருக உடுத்தியபடி , அவசரத்திலிருந்தான். " என்ன நித்திரையாய் இருந்தனியளோ ?"

"ச் காட்ஸ் விளையாடிக் கொண்டிருந்தனுங்கள்" என்றுன் முத்து எரிச்சலுடன்.

"ஒரு பத்து மாக் எடுக்கலாமே? நாளைக்குப் பின்னேரம் திருப்பித் தருவன்" என்று நெளிந்தான் குமார்.

"இதுக்கே எழுப்பினனி " என்று தாறுமாறுகப் பேசநினைத்த முத்து, தனக்கும் அவ்வப் – போது இப்படி மாற வேண்டிய சந்தர்ப்பங்கள் வருவதை நினைத்து "பொறு இருக்கோ எண்டு பாக்கிறன்" என்றபடி அறைக்கு வந்தான்.

"ஆரான்?"

"என்னவாம்?"

"அது குமார். பத்துமாக் இருந்தாத் தரட்டாம்"

"நல்ல முழுவியளம்"

பேசைக் கிளறி, மடிந்திருந்த பத்து மார்க் தாளை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தான் முத்து.

"நாளைக்குப் பின்னேரம் தாறன்" என்றபடி குமார் மறைந்தான்.

முத்து மறுபடி அறைக்குள் வந்தபோதும் ஞானமும், பாலகுமாரும் அசையவில்லை.

"எழும்புங்கோடா. சமையல் சாமானுகள் வாங்க வேணும். இண்டைக்கு எங்கட படி கழுவுற முறை. நீங்கள் சவங்கள்மாதிரிக் கிடக்கிறியள்"

"குழப்பாதையடாப்பா. மனுசன் நிம்மதியாயிருக்கிற நேரமே படுக்கிற நேரந்தான் . அதில கைவைக்காதை" என்று பாலகுமார் தத்துவம் சொன்– ஞன்.

"இப்ப படுக்கிற நேரமே?"

"இன்னும் கொஞ்சம் நேரமிருக்கு"

"அதுசரி. முந்தநாள்தா– னே சோசல்காசு கிடைச்சது. பிறகேன் குமார் இண்டைக்கு கடன் கேக்கிறுன். பேசோட காசைத் துலைச்சுப் போட்டானே?"

"கிட்டத்தட்ட துலைச்ச மாதிரித்தான். உனக்கு உவனைத் தெரியாதே? உவன் இப்ப ஒரே ஸ்பீல் மெசின் (சூது) தான். முந்த நாள் சோசல் காசெடுத்து அப்பிடியே கொண்டே எல்லாத்– தையும் மெசினுக்க போட்டிட்– டான். உது இப்ப கன காலமாய் நடக்குது" விளக்கமளித்தான் பாலகுமார்.

"உனக்கெண்ணெண்டு தெரியும்?" முத்து சந்தேகத்தோடு பாலகுமாரைப் பார்த்தான்.

"குளிரெண்டிட்டு சில வேளை ஸ்பீல் கடைக்கே போய் நிக்கிறனுன். நான் விளையாடுறதே இல்லை" என்ற பாலகுமார் தன்னுடைய பதிலை அவர்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ள் நம்பவில்லையென்று தெரிந்த தும் போர்வையால் முகத்தை மூடிக் கொண்டான்.

"மச்சான் நாறப்போறு ய். உப்பிடிக் குளிருக்கெண்டுபோ ய்நிண்டுதான் எல்லாரும் ஸ்பீலுக் கை போய் விழுந்தவை. அதுக்க சிக்கினியோ பிறகு மீள மாட்டாய். இப்ப பாத்தனிதானே ? குமார் விடிய வெள்ளன கடன் வாங்கிக்கொண்டு போறதை. காசை மெசினுக்க போட்டிட்டு வந்து கையை நீட்டினியோ செகிட்டைப் பொத்தி வாங்குவாய்" என்று முத்து நட்புடன் எச்சரித்தான்.

"அப்ப ஏன்ராப்பா தடக்கி விழுந்தா ஸ்பீல் கடைஎண்ட மாதிரி அள்ளுகொள்ளையா கட்டிவைச்சிருக்கிறுங்கள்" ஞானம் முத்துவைக் கிண்டினுன்.

"உங்கட காசையெல்லாம் கொண்டே போடத்தான். பேய்க்கதை கதையாதை. தான் குடுக்கிற காசை திருப்பி வறுகுறதுக்கு அரசாங்கம் கட்டிவைச்சிருக்கு. நீங்களும் இளிச்சுக்கொண்டுபோய் குடுத்திட்டு வாங்கோ"

"ஸ்பீல் கடையள் அரசாங்கத்தின்ரை இல்லையே. தனியாற்றைதானே?"

"அரசாங்கம் எண்டா என்ன?முதலாளியளின்ரை கொம்பனிதானே?உப்பிடி பேயாய் சுறண்டுறதை அரசாங்கமே நேர நடத்திறு என்ன?முதலாளியள் செய்துகொண்டு அரசாங்கத்தை நடத்திறுல் என்ன?எல்லாம் ஒண்டுதான்"

"விடிய வெள்ளன கதைக்கிற கதையளைப் பார். சீர்காழியின்ரை பக்திப் பாட்டொண்டைப் போடுவமெண்டில்லை" என்றுன் பாலகுமார் போர்வைக்குள்ளிருந்தபடி.

"உங்கட ஆத்தையளைக் கழுவுறதுக்கு பக்திப் பாட்டென்ன வோசிங் மெசினே? நீங்கள் இப்ப எழும்பிறியளோ இல்லை தண்ணி கொண்டந்து ஊத்தவோ?" என்றுன் முத்து தயாராக.

"கோவியாதை. அப்பிடியெண்டா ஒரு ஒப்பந்தம் செய்வம். நீ கடைக்குப் போய் சாமாங்களை வாங்கியா. நாங்கள் றூமையும், படியளையும் கழுவுறம். எப்பிடி?" என்றுன் ஞானம்.

"கேக்க நல்லாய் தானிருக்கு. சொன்னபடி நீங்கள் செய்வியள் எண்டு என்னெண்டு நம்பிறது?" பற்பசை, பிரஷ், துவாய் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு முத்து கேட்டான்.

"ஒப்பந்தம் எண்டால் அப்பிடித்தான். எங்கட காரியம் முடிஞ்ச உடன கான்சலாய் போகும்" பாலகுமார் மெதுவாகச் சொன்னுன்.

"என்னவாம்?"

"ஒப்பந்தப்படிதான் நடக்காட்டி இண்டைக்கு போத்திலையே தொடுறதில்லையாம்" ஞானம் சமாளித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உங்கட சத்தியமேபோத்தலாய் தானிருக்கு. நாசமாய் போங்கோ" என்று வாழ்த்தியபடி முத்து பாத்ரூமுக்கு போய் காலைக் கடன்களை முடித்து உடை மாற்றித் தயாரானான்.

"நான் வரேக்க எல்லாம் கழுவி பனிச்சிட வேணும்" என்றபடி முத்து புறப்பட்டான்.

"என்ன மாதிரி" ஞானம் தலையைக் கவிழ்த்து பாலகுமாரை விசாரித்தான்.

"அவன் கிடந்தான். நீ படு" பாலகுமார் மற்றப் பக்கம் திரும்பிப் படுத்தான்.

நகரத்துக்கு வந்து கடைகளை நோக்கிப் போகையில் முத்து பல புது முகங்களைச் சந்தித்தான். இலங்கை சூட்கேசுகள், பொதிகள் போன்றவற்றுடன் - பல புதிய தமிழ் முகங்கள் தயங்கிக் கொண்டிருந்தன.

புதினம் அறியும் ஆவலுடன் முத்து அவர்களை நெருங்கி விசாரித்தான்.

"நாங்கள் புதிசாய் வீரட்டடிச்சு வந்திருக்கிறம். சோசலில பதியப்போக அவங்கள் ரான்ஸ்லேற்றரை கொண்டா என்டு கலைக்கிறுங்கள். நாங்கள் இங்க புதுசு. ஆரையெண்டு பிடிக்கிறது"

"அண்ணை நீங்க வந்துஒருக்கா கதைச்சு விடுறியளே?"

'அண்ணை' என்று அவர்கள் விளித்ததில் முத்துவுக்கு மெய்சிலிர்த்து. "அதுக்கென்ன வாங்கோ" என்று வீரநடை போட்டவன், இடையில் போகும்போது தான் தன்னுடைய டொச்மொழியறிவை நினைத்துக் கவலைப்பட்டான். எனினும் வந்தவர்கள் எவருக்கும் டொச் தெரியாதென்பதால் சமாளிக்கலாம் என்ற துணிவு வந்தது.

"நங்க வரேக்க நாட்டுநிலைமையள் என்ன மாதிரி?" என்று விசாரித்தான்.

"என்னத்தைச் சொல்லுறது. எல்லாம் கொலையள்தான். ஒருபக்கத்தால தொண்டர்படைக்கு கலைச்சுக் கலைச்சு ஆள் சேக்கிறுங்கள். இன்னொரு பக்கத்தால வாயைத் திறந்தாலேசுடுறுங்கள்"

"கண்டபடி கடத்திறுங்கள் நாயைச் சுட்ட மாதிரி சுட்டு றேட்டில போடுறுங்கள். கேக்க ஆக்களே இல்லை"

"எல்லா இயக்கங்களுமோ

"எல்லாந்தான். பேருகள் தான் வித்தியாசம். ஆருக்கு வசதியோ அவங்கள் சுட்டுக் கொல்லுறுங்கள். எல்லாரும் ஆயுதத்தை வைச்சிருந்தா ஆர் என்னத்தைக் கதைக்கிறது?"

கதைத்தபடியே நகரசபைக் கட்டிடத்திற்குள் அவர்கள் நுழைந்தார்கள்.

(இன்னும்வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியாவில் புதிய பிரதமர்

"நாங்கள் ஒரு மாபியா அரசாங்கத்தால் ஆளப்பட்டுக்கொண்டிருக்கிறோம்" என்ற வார்த்தைகள் இரண்டு வருடங்களுக்கு முன்புவரை ராஜீவ் காந்தியின் அரசாங்கத்தில் இருந்தவரும், ராஜீவின் நம்பிக்கையான அரசியல் 'தோழனுமான' வி.பி.சிங்கினால் தெரிவிக்கப்பட்டவை. இவர் தான் இப்போது இந்தியாவின் புதிய பிரதம மந்திரி.

'மகாராஜாக்கள், பிரபுக்கள்' வம்சத்தைச் சேர்ந்த இவர், இந்தியாவில் சனத்தொகைகூடிய உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்துள்ளார்.

வி.பி.சிங் தலைமை வகிக்கும் 'தேசிய முன்னணி' இந்து தேசியவாதக் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியுடனும், கம்யூனிஸ்ட் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்து இந்திரா காங்கிரஸிடமிருந்து ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியுள்ளது.

"42வருட காலமாக, சுதந்திரமடைந்த காலத்திலிருந்து 40 வருட காலமாக இந்தியாவை ஆட்சி செய்த நேரு பரம்பரையைத் தோற்கடிக்க வேண்டும்" என்பது தேர்தல் பிரச்சாரங்களின்போது சிங்கின் கோசமாக இருந்தது.

ராஜீவ் அரசாங்கத்தில் வி.பி.சிங் நிதியமைச்சராக இருந்த காலத்தில், நீண்ட காலமாக அரசின் 'தாராளவாத' நடவடிக்கைகளுக்கு 'மோட்டாராக' இருந்தார். வெளிநாட்டு மூலதனங்களை ஊக்குவித்தும், தனியாருக்குச் சலுகைகள் வழங்கியும் உற்பத்தி 'அதிகரிக்க' வைக்கப்பட்டது. தனது அரசியல் 'கொள்கை'யால் சிங் வெளிநாடுகளின் 'நன்மதிப்பை' சம்பாதித்துக் கொண்டார்.

## வேலற்றோர்

செல்வந்தர்களுக்கும், மத்தியதர வர்க்கத்தினருக்குமாக எண்ணிலங்காத 'சீர்திருத்தங்கள்' செய்துவரும் நேரத்தில் 400 கோடி ஏழை மக்களின் வாழ்க்கை தரம் இன்னும் பாதாளத்துக்கு 'இறங்கியது'. மத்தியதர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்க்கத்தின் வாழ்க்கை தரத்தை 'நிர்ணயிக்கும்' பொருட்களான சலவை இயந்திரம், கழிவு அகற்றி, மைக்ரோவெல போன்றவை அவர்களுக்கு கிடைத்ததுடன், உயர்தர உணவு விடுதிகள், அழகு நிலையங்கள், மஸாஜ் நிலையங்கள் என்பன 'தாராளமாக' உருவாக்கப்பட்டன.

ஜப்பானின் உதவியுடன் உருவாக்கப்பட்ட கார்கள், மோட்டார் சைக்கிள்கள், நவீன சாதனங்கள் அடங்கிய தனியார் மருத்துவ நிலையங்கள், நீச்சல் குளங்கள் உள்ள 5 நட்சத்திர ஓட்டல்கள் போன்றவற்றை அனுபவிப்பதற்காக இந்திய, வெளிநாட்டு வங்கிகள் மூலம் 'கஷ்டப்பட்டவர்களுக்கு!' கடன்கள் வழங்கப்பட்டன.

1986ஆம் ஆண்டு இந்தியாவில் 'ஒருசில' மிகப் பெரிய நிறுவனங்களின் கணக்குப் புத்தகங்களை 'பரிசீலனை' செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பித்தபோது வி.பி. சிங்கிற்கும் 'நல்லகாலம்' ஆரம்பித்தது.

நிதியமைச்சரின் கவனமெல்லாம் இந்த நிறுவனங்களின் வருமானவரிக் கணக்குகளிலும், அவர்களது 'கறுப்பு' பணத்திலும் திசை திரும்பியது. மேலும் 'சில' இலஞ்ச ஊழல்களிலும் இவர் கை வைத்தபோது மத்தியசபை மந்திரிசபையின் அங்கத்துவராகவும் இ. காங்கிரசின் அங்கத்தவராகவும் இவர் இருக்கும் நாட்களுக்கு 'காலக்கெடு' விதிக்கப்பட்டது.

ஜனவரி 87இல் 'எதிர்பாராதவாறு' இவர் பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டார். பதவி மாற்றம் செய்யப்பட்ட 79நாட்களில், மேற்குஜேர்மெனியினதும், சுவீடனினதும் ஆயுத உற்பத்தி ஆலைகளுடனான ஆயுத வியாபாரத்தில் 'முரண் பட்டு' அமைச்சைவிட்டு விலகினார். இதன் பின் இ. காங்கிரசிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்.

சுவீடன் ஆயுத நிறுவனம் செலுத்திய 'இடைத்தரகு கூலி' சம்பந்தமாக 'மிகஉயர்' பதவி வகித்தவர்களின் 'கால் தடங்களைத்' தொடர்ந்து சென்றபோது அது காந்தி 'சாம்ராஜ்யத்தின்' ராஜபீடம் வரை சென்றது.

இதையடுத்த காலங்களில் இது பற்றிய பேச்சே இந்திய அரசியல் வானை ஆக்கிரமித்தது. சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் அன்றிருந்த ஊழல்களுக்கு 'எதிராக' போராடும் 'திருவாளர் பரிசுத்தம்' என்று காலடி வைத்த, இப்போது பதவியிழந்த ராஜீவின் 'பரிசுத்தத்தில்' சிங்கினால் 'கறைகள்' ஏற்படுத்தப்பட்டன.

கருத்தியல் ரீதியாக மிகவும் வேறுபட்டு நிற்கின்ற எதிர்கட்சிகளை ஒன்றிணைப்பதில் சிங் இப்போது வெற்றியடைந்திருந்—

(தொடர்ச்சி 41ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புராதன வாழ்விலிருந்து.....

எஸ். குமாரசாமி

பண்டைய சமுதாயம் பற்றிய அறிதலை ஓரளவு தொகுத்துத் தர இங்கு முயற்சிக்கிறேன். கட்டுரை வடிவில் கொடுப்பதைவிட ராகுல சாங்கிருத்தியானின் வால்காவிலிருந்து கங்கைவரை எனும் நாவலைத் தழுவிய உரைநடை மிகுந்த கதை வடிவில் கொடுப்பதே வாசகரை ஈர்க்க வல்லது எனக் கருதுகிறேன். அந்த வடிவில் இங்கு தர முயற்சித்துள்ளேன்.

நேரம் எட்டு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. எங்கும் ஒரே கும்மிருட்டு. விளக்கேயில்லாத அந்த கற்கள் நிரம்பிய ஒழுங்கைக்குள் பழக்கமானவன் போல் மகேசனின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தான் காந்தன்.

மகேசன் எண்பத்தி நான்காம் ஆண்டில் விடுதலை இயக்கமொன்றிற்குப் பயிற்சிக்காகச் சென்று இந்தியாவில் ஒரு வருடத்தைக் கழித்தபின் அவ்வியக்கத் தலைமையின் துரோகத்தனத்தையும், அராஜகங்களையும் இனம் கண்டு வெளியேறியவன்.

ஆரம்ப காலங்களில் அரசியலைப் பற்றி அதிகம் தெரியாதவனாக இருந்தாலும், பின்னர் பல அரசியல் வகுப்புகளில் பங்கெடுத்ததாலும், புத்தகங்களை வாசித்ததாலும், தெளிவுள்ள சில தோழர்களுடன் விவாதித்ததன் மூலமும் அரசியல் என்ன என்பதையும், எதிரி யார்? நண்பன் யார்? என்பதையும் நன்றாகவே புரிந்து கொண்டவன்.

இப்போது அவனும் வேறு சில நண்பர்களும் இணைந்து தலைமறைவாகச் செயற்பட்டு வருகிறார்கள். இவ்வளவே மகேசனைப் பற்றிக் காந்தன் அறிந்து கொண்டது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு புள்ளிகள் அதிகம் இல்லாததால் வேறு வேலைகளைத் தேடிக் கொண்டிருந்த காந்தன் சாதாரண மற்றைய இளைஞர்களைப் போலவே சினிமா, குமுதம், ஆனந்த விகடன் எனப் பொழுதைப் போக்கிறான்.

"போராட்டம் சரி வராது", "தமிழன் ஒன்று பட

www.tamilarangam.net

மாட்டான்" என்று 'வேதாந்தம்' பேசித் திரிந்த காந்தனுக்கு மகேசனின் தொடர்பால் பல கேள்விகளுக்கான விடைகளைத்-தேடி அறியக் கூடியதாகவிருந்தது.

ஆரம்ப காலங்களில்மகேசன் கூறுபவற்றிற்கு இடைமறித்து எதிர்க் கேள்விகளைப் போட்டு விதண்டாவாதங்களை மேற்கொண்டிருந்தவன் காலப் போக்கில் விவாதங்களில் உள்ள உண்மைக-ளை உணரத் தலைப்படும்போது தன்னுடைய பொறுப்பின்மைக்காக வெட்கப்படத் தொடங்கினான்.

இப்போதெல்லாம் காந்தன் நன்றாக மாறிவிட்டான். புரட்சியைப் பற்றிச் சிந்திக்கையில் வாழ்க்கையில் அர்த்தம் நிறைந்திருப்பதையும், புதிய உணர்வுக-ளைப் பெறக் கூடியவனாகவும் இருந்தான்.

அரசியலின் ஆரம்ப அடிகளைப் புரிந்து கொள்ளத்தொடங்கிய அவனுக்கு ஆதிகாலத்தில் பண்டைய மனிதன் எப்படி வாழ்ந்தான் என்பது பற்றி அறிந்து கொள்ளுமுகமாக இப்போது மகேசனிடம் செல்கிறான்.

இருவரும் இலங்கைப் பிரச்சினை, ஊர்ப் பிரச்சினை என்று பலவற்றையும் சிறிதுநேரம் அளவளாவிவிட்டு விடயத்திற்கு வருகின்றனர்.

காந்தனின் அரசியல் அறிவைக் கவனத்தில் கொண்டு அவனுக்கு புராதன மனித சமுதாயம் எப்படி இருந்தது என்பதை புரிய வைக்கும் நோக்கில் - தான் படித்த புத்தகமொன்றிலிருந்து சில முக்கியமான பகுதிகளை வாசிக்கத் தொடங்கினான் மகேசன்.

"... சூரியன் சரியாக உச்சிக்கு வந்துவிட்டான். அந்தக் கூட்டத்தில் ஆக இளையவள்போல இருப்பவள்தான் முதலில் விழித்திருக்க வேண்டும். எதையோ கண்டு மிரண்டவளாய் கத்தத் தொடங்கினாள்.

இவளின் சத்தம் கேட்டு விழித்த அந்த மனிதர்கள் தமக்குள் மாறி மாறி கத்தத் தொடங்கினார்கள்.

அந்தக் கூடாரத்தில் இருந்த பெண்ணொருத்தி மிகவும் துணிந்தவளாய் கையில் ஈட்டி போன்ற கூரிய ஆயுதம் ஒன்றைக் - காவிக் கொண்டு முன்னால் வந்தாள். மற்றவர்கள் அவளைப்பின் தொடர்ந்தனர்.

இவர்களைக் கண்ட ஓநாய் ஒன்று புதருக்குள் ஓடி மறைந்து கொண்டது. குகைக்கு வெளியே சென்று சுற்றிப் பார்த்து விட்டு வந்த அப்பெண் இளையவளை அணைத்துக் கொண்டாள்.

அந்தக் கூட்டத்தினரில் அவள்தான் தலைவியாக இருக்கவேண்டும். அவளை எல்லோரும் 'அனு' என்று அழைத்தார்கள்.

நீண்ட நேரத்தின் பின்விழித்தெழுந்தமையால் அவர்களுக்கு பசித்தது. எல்லோரும் கற்களா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லானதும், ஈட்டி போன்றதுமான ஆயுதங்களைக் கைகளில் ஏந்திக் கொண்டு வேட்டைக்குப் புறப் பட்டனர். அரு எல்லோரையும் ஒருமுறை கண்களால் நோட்டமி ட்டாள்.

சிந்து நதிக்கரையின் அட ர்ந்த காடுகளினூடே அவர்கள் வெறும் கல்லாயுதங்களையும் , கூர் நகங்களையும், முரட்டு பல த்தையும் மட்டுமே நம்பிக்கை- யாகக்கொண்டு வேட்டையாடி, வாழுகின்றனர்.

அரு நதிக்கரையோரத்- தைவிட்டு வெகுதூரம் காடுகளு க்குள் அவர்களை அழைத்துச்செ ல்ல மாட்டாள். காடுகளுக்குள் திசை மாறிச் சென்று தாகத் தால் வாடிய அனுபவங்களை இ ளமையிலேயே அவள் தரிசித்த- வள்.

இதையும்விட ஒருமுறை அரு வின் தாயார் அக் கூட்டத்தினரு க்கு தலைவியாக இருக்கும்போ து வேட்டைக்காகக் காடுகளில் அலைந்து இறுதியில் வழி தவறி வேறு ஓர் மனிதக் கூட்டம் வாழும் பகுதிக்குள் சென்றனர்.

இவர்களைப் பார்த்து ஆத்திரமடைந்த அந்த மனிதர் கள் அருவின் தாயையும், இன்னும் பலரையும் கொன்றுவிட்டனர். அருவின் தகப்பனும், இரு சகோ தரிகளும், மூன்று சகோதரர்க- ளுமே எஞ்சியவர்கள்.

அன்றிலிருந்து அருவே அக் குழுவுக்குப் பொறுப்பாக இருந்

(38 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாலும் பிரதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் வேறுபட்ட தும், இந்துமதவாதக் கட்சியையு ம், கொம்யூனிஸ்ட் கட்சியையும் இணைத்திருக்கும் இத் தேசிய முன்னணி ஆகக் குறைந்தது ஒரு வருடத்துக்கு மேல் 'நின்றுபிடிக் குமா' என்பது சந்தேகமே.



"லெக்சனில ராஜீவ் தோத்து வி.பி. சிங் வந்திட்டாரு. இனி நம்ம கஷ்டங்க ள் தீந்திருமா?"

"ஒரே கதிரையில ஜன் மாறினப்போல எங்கட கஷ்டங்கள் ஏன் தீரணும் ? அவனுங்க கஷ்டம் தான் தீரும்"

—இன்னன்ஜ

www.tamilarangam.net

தாள். அவர்கள் இவர்களைக் - கொல்லாவிட்டால் இவர்கள் அவர்களைக் கொன்றுவிடுவார்கள். எதிரிகளைச் சிறைப்பிடித்து அடிமைகள் போல் வைக்கும் பழக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை மாறாக எதிரிகளைக் கொன்றுவிடுவார்கள்.

இப்போது மீண்டும் அனுவின் குழு பெருத்துவிட்டது. அனுவே தனது தகப்பனுக்காக மூன்று பிள்ளைகளையும், சகோதரர்களுக்காக ஏழு பிள்ளைகளையும் பெற்றெடுத்திருந்தாள்.

அவளின் இரு சகோதரிகளும் இவ்வாறே பிள்ளைகளைப் பெற்றெடுத்திருந்தனர். குழுவின் எண்ணிக்கை வேட்டையால் இறந்தவர்கள் போக மீதி பதினெட்டுப் பேராவது இருப்பார்கள்.

(தொடர்ச்சி அடுத்த கலத்தில்)

# விடுதலை வேண்டுமடி

ந. சுசீந்திரன்

விடுதலை வேண்டுமடி
நமக்கினி விடுதலை வேண்டுமடி.

அச்சம், மடம், நாணம் ஆன பயிர்ப்பென
இச்சைப் பொருளென இம்சைப் படுத்தியே
குச்சை அடைத்தொரு கூண்டில் நிறுத்தியே
வைச்ச உலகினைத் துச்சமெனக் கொண்டு
(விடுதலை வேண்டுமடி......)

குழந்தை பல பெற்றுக் குசினியடைபட்ட
விலங்கை ஒடித்தொரு வேள்வி முடித்தினி
ஆணுக்குப் பெண் சரி ஆகும் என அடி
மட்டத்தில் நின்று நாம் கூவுகிறோம் இனி
(விடுதலை வேண்டுமடி......)

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

டிசம்பர் 89 கோலம்: 24

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி .............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

6 மாதங்கள் – 20 டி.எம்.
1 வருடம் – 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்

6 மாதங்கள் – 25 டி.எம்.
1 வருடம் – 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரம் ஆயிரம் ஆண்டு பலவாக
தந்தை முதற்கொண்டு தனயன் வரும் வரை
ஆணின ஆதிக்க அமைப்பிலிருந்தினி
பாலியற் பாலெனப் பார்த்தது போயினி
(விடுதலை வேண்டுமடி......

வேலைக்குப் போறவர் வேண்டிய சக்தியை
நாளுந்தரவல்ல நயமான பொருளென
காலாதி காலமாய்க் கண்ட முதலாளித்
தத்துவம் கட்டிய தளத்தை உடைத்தினி
(விடுதலை வேண்டுமடி.......

கலியாணத் தேவைக்கு காசு, பொருள், நகை
விலையாகப் பேசியே விற்கும் உலகினில்
பலியாகிப் போகின்ற பாழும் நிலைவிட்டு
வலிவோடு வாழவே வாருங்கள் கூவுவோம்
(விடுதலை வேண்டுமடி......

காடு களனியில் கடற்கரை வாழ்வினில்
தேயிலை மலையினில் தெருநீள ஆலையில்
பாடுபடுகின்றோம் பார்க்கு மிடமெல்லாம்
அடக்குமுறையடி ஒடுக்குமுறை – இனி
(விடுதலை வேண்டுமடி......

அடிக்கும் உதைக்கும் அடுத்த வீட்டுக்காறர்
கதைக்கும் பயந்தினி வாழ்ந்தது போதும் நாம்
படிக்கும் மதமெல்லாம் பெண்வதை சொல்லியே
கலையென்று பண்பென்று கட்டி வைத்தாரெம்மை
(விடுதலை வேண்டுமடி......

கலையென்று ஒன்றுண்டு, கலாச்சார மென்றுண்டு
மனிதனை மனிதன் அடிமைப் படுத்தாத
கலையினைத் தேடுவோம், கலாச்சாரங் காணுவோம்
களத்திலேயொரு பண்பாடு தேடுவோம்
(விடுதலை வேண்டுமடி......)